بِسْمِ اللّٰہِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ نَحْمَدُہٗ وَنُصَلِّی عَلٰی رَسُوْلِہِ الْکَرِیْمِ وَعَلٰی عَبْدِہِ الْمَسِیْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّۃٌ

தொகுதி 11

இதழ் 40

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1448 - ரபீயுஸ் ஸானீ 12

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - அகா 01 ★ 01 அக்டோபர் 2026


## அல்லாஹ்வின் கட்டளை

اُتْلُ مَاۤ اُوْحِیَ اِلَیْكَ مِنَ الْكِتٰبِ وَاَقِمِ الصَّلٰوةَ ؕ اِنَّ الصَّلٰوةَ تَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ وَاللّٰهُ یَعْلَمُ مَا تَصْنَعُوْنَ

( தி ரு க் கு ர் ஆ ன் )

வேதத்திலிருந்து உமக்கு வஹீ அறிவித்ததை ஓதுவீராக! மேலும் தொழுகையினை நிலை நாட்டுவீராக! நிச்சயமாக தொழுகை வெட்கக் கேட்டிலிருந்தும், பகிரங்கமான தீமைகளிலிருந்தும் (ஒருவனைத்) தடுக்கின்றது. நிச்சயமாக அல்லாஹ்வை நினைவு கூருவது (ஏனையற்றை விட) பெரிது. மேலும் அல்லாஹ் நீங்கள் செய்வதை அறிகின்றான். (23: 46)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நபிமொழி — அல்லாஹ் தொழுகைகளின் மூலமாக பாவங்களை அழித்து விடுகிறான்

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّهُ سَمِعَ رَسُولَ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ، يَقُولُ:
"أَرَأَيْتُمْ لَوْ أَنَّ نَهَرًا بِبَابِ أَحَدِكُمْ يَغْتَسِلُ فِيهِ كُلَّ يَوْمٍ
خَمْسًا مَا تَقُولُ ذٰلِكَ يُبْقِي مِنْ دَرَنِهِ، قَالُوا: لَا يُبْقِي مِنْ دَرَنِهِ شَيْئًا،
قَالَ: فَذٰلِكَ مِثْلُ الصَّلَوَاتِ الْخَمْسِ، يَمْحُو اللّٰهُ بِهِ الْخَطَايَا"

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதை நான் கேட்டேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்: உங்களில் ஒருவரின் வீட்டு வாசலில் ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்து, அதில் அவர் தினமும் ஐந்து முறை குளித்தால், அவர் அதில் ஐந்து முறை நீராடிய பிறகும் அவரது உடலில் ஏதேனும் அழுக்கு எஞ்சியிருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்களா? என்று கூறுங்கள். அதற்கு, இல்லை! சிறிதும் அழுக்கு எஞ்சியிருக்காது என்று மக்கள் கூறினர்.

அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆக, இதுவே ஐவேளைத் தொழுகைகளுக்கான உவமையாகும். அல்லாஹ் இதன் மூலம் பாவங்களை அழித்து விடுகிறான்.

(ஸஹீஹ் புகாரி, கிதாப் மவாக்கீத் அஸ்-ஸலாத், பாபுஸ் ஸலவாத் அல்-கம்ஸ் கஃப்பாரதுன் லில் கதாயா)

* * * * * * * * * * *

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள் — தொழுகை என்பது உண்மையில் மகத்துவ மிக்க இறைவனிடம் செய்யும் துஆ ஆகும் அதுவின்றி மனிதனால் உயிருடன் இருக்க முடியாது

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தொழுகை என்பது என்ன? தொழுகை என்பது உண்மையில் மகத்துவ மிக்க இறைவனிடம் செய்யும் துஆ ஆகும். அதுவின்றி மனிதனால் உயிருடன் இருக்க முடியாது; அதே போன்று ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சிக்கான ஏற்பாடு அமைய முடியாது. அல்லாஹ் அவர் மீது தன் அருளைப் பொழியும்போது, அந்நேரத்தில் அவருக்கு உண்மையான இன்பமும், நிம்மதியும் கிடைக்கும். அப்போது அவருக்குத் தொழுகையில் இன்பமும், ஆர்வமும் ஏற்படத் தொடங்கும். சுவையான உணவை உண்பதால் இன்பம் கிடைப்பது போலவும், அழுது மன்றாடுதலின் இன்பமும் ஏற்படும். மேலும், தொழுகையாளியிடம் இந்த நிலை உருவாகி விடும். இந்த நிலைக்கு முன்னர், எப்படி உடல் ஆரோக்கியம் கிடைக்கும் பொருட்டு ஒருவர் கசப்பான மருந்தைக் குடிக்கின்றாரோ அதேபோன்று, விருப்பமில்லாத நிலையிலும் தொழுவதும், துஆக்கள் செய்வதும் அவசியமாகும்.

இந்த விருப்பமில்லாத நிலையிலும், இதிலிருந்து இன்பமும், ஆர்வமும் உருவாகுவதை கடமையாகக் கருதி இந்த துஆவை செய்ய வேண்டும்:

**அல்லாஹ்வே! நான் எவ்வளவு குருடனாகவும், பார்வையற்றவனாகவும் இருக்கிறேன் என்பதை நீ பார்க்கின்றாய். நான் தற்போது முற்றிலும் மரணித்த நிலையில் இருக்கிறேன். சிறிது நேரத்திற்குப் பிறகு எனக்கு (அழைப்புக்) குரல் வரும் போது, நான் உன் பக்கம் வந்து விடுவேன் என்பதை நான் அறிவேன். அந்த நேரத்தில் என்னை யாரும் தடுக்க முடியாது. ஆனால் என் இதயம் பார்வையற்றதாகவும், அறிவற்றதாகவும் இருக்கிறது. எனவே உன் மீதான அன்பும், ஆர்வமும் அதில் உருவாகும் வண்ணம் ஒளியின் சுடரை அதில் இறங்கச் செய்வாயாக! நான் பார்வையற்றவர்களுடன் எழும்பாமல் இருக்கும் வகையிலும், குருடர்களுடன் இணைந்து விடாமல் இருக்கும் வகையிலும் அருள் புரிவாயாக!'**

ஒருவர் இவ்வகையான துஆ வேண்டும்போது, மேலும் அதில் நிலைத்திருக்கும்போதும், அவருடைய அதே ஆர்வமில்லாத தொழுகையில் அவரிடம் உருக்கத்தை உண்டாக்கும் ஒரு பொருள் வானத்திலிருந்து அவர் மீது விழுகின்ற ஒரு நேரத்தை அவர் காண்பார்.

(மல்ஃபூஸாத், தொகுதி 3, பக்கம் 281, பதிப்பு 2022)

* * * * * * * * * * *

## தஃப்ஸீரே கபீர் — தொழுகையில் செலவிடப்படும் நேரம் வெட்கக்கேடான மற்றும் தீய செயல்களிலிருந்து பாதுகாக்கிறது

اِنَّ الصَّلٰوةَ تَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல்-அன்கபூத்தின் 46-வது வசனத்தின் விளக்கவுரையில் கூறுகிறார்கள்:

பொருள்: நிச்சயமாகத் தொழுகை வெட்கக்கேடான மற்றும் விரும்பத்தகாத செயல்களிலிருந்து விலக்குகிறது.

மனிதனின் இருப்புடன் தொடர்புடைய அந்த தீய விஷயங்களிலிருந்தும், மேலும் சமுதாயத்தைப் பாதிக்கக் கூடியவையாக இருக்கின்ற அந்த விஷயங்களிலிருந்தும் தொழுகை மனிதனைத் தடுக்கிறது. ஏனெனில், ஐவேளை ஜமாஅத்தாக தொழுவது முஸ்லிம்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவர்களிடம் ஜமாஅத்தான தொழுகை நிலைநாட்டப்பட்டு விட்டால், பின்னர் அவர்களின் பெரும்பாலான நேரம் இறைவனை வணங்குவதில் கழியும். தொழுகையில் செலவிடப்படும் நேரம் அவர்களை வெட்கக்கேடான மற்றும் தீய செயல்களிலிருந்து பாதுகாக்கும். இதேபோல், தொழுகையில் தமக்காகவும், மற்றவர்களுக்காகவும் துஆ செய்யப்பட்டுக் கொண்டிருக்கும்போது, பின்னர் அந்த துஆக்கள் இறைவனின் அருளை ஈர்த்து, அவர்களின் சுய சீர்திருத்தத்திற்கும் காரணியாக அமையும். மேலும், மற்றவர்களின் சீர்திருத்தம் மற்றும் முன்னேற்றத்திற்கும் காரணியாக ஆகிவிடும். இதேபோன்று, தொழுகையில் திருக்குர்ஆன் வசனங்கள் ஓதப்படுகின்றன. மேலும் தஸ்பீஹ் மற்றும் தஹ்மீத் அதிக அளவில் செய்யப்படுகின்றன. (இதனால்) மனிதனது உள்ளத்தின் மீது எத்தகைய தாக்கம் ஏற்படுகிறது என்றால், அவன் பாவங்களின் மீது வெறுப்படையத் தொடங்கி விடுகிறான். சுருக்கமாக, அல்லாஹ்

اُتْلُ مَاۤ اُوْحِیَ اِلَیْكَ مِنَ الْكِتٰبِ

(வேதத்திலிருந்து உமக்கு வஹீயாக அறிவிக்கப்பட்டதை ஓதுவீராக) என்றும்,

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்....

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# பிரிட்டன் ஆண்டு மாநாடு - 2026
# ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் துவக்க உரையின் சுருக்கம்

**அல்லாஹ் வெற்றிக்கு இறையச்சத்தை நிபந்தனையாக வைத்துள்ளான்**

அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது அகப்பார்வை மிக்க உரையின் மூலமாக பிரிட்டன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 60-வது ஆண்டு மாநாட்டை தொடங்கி வைத்தார்கள்.

தஷஹ்ஹுத், தஅவூது மற்றும் சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு, ஹஜ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இந்த மாநாட்டின் நோக்கங்களை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:

நம்மிடம் அல்லாஹ்வின் மீதான பயம் உருவாக வேண்டும் என்பதற்காகவும், தூய்மை, இறையச்சம், மென்மையான உள்ளம் மற்றும் பரஸ்பர அன்பு சகோதரத்துவம் ஆகியவற்றில் ஒருவர் மற்றவருக்கு முன்மாதிரியாக ஆகி விட வேண்டும் என்பதற்காகவும் நாம் ஜல்ஸாவை நடத்துகின்றோம்.

எனவே, இந்த நோக்கத்திற்காகவே இந்த மாநாடுகள் நடத்தப்படுகின்றன; மேலும், இதே நோக்கத்திற்காகவே இன்று நீங்கள் இங்கு கூடியுள்ளீர்கள்.

நாம் இந்த நோக்கத்தை அடைவதற்கு முழுமையாக முயற்சி செய்யாவிட்டால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வருவதும் வீணாகும்; மேலும், இந்த மாநாடுகளுக்கு வருவதும் நோக்கமற்றதாகும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், இஸ்லாமிய போதனைகளின் ஆணிவேர் 'தக்வா' ஆகும். இறையச்சம் இருக்கும் என்றால், பின்னர் மனிதன் அல்லாஹ் கூறியுள்ள போதனைகளின்படி செயல்பட முடியும். இல்லையெனில் மார்க்கத்தின்படி நடப்பதாக நாம் கூறும் கூற்றுகள் வெறும் கோஷங்களாகவே எஞ்சியிருக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இந்த அடிப்படை நோக்கத்தை தமது ஒரு கவிதையில் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்:

' ஒவ்வொரு நன்மையின் ஆணிவேரும் இறையச்சமே ஆகும். இந்த ஆணிவேர் (உயிருடன்) இருந்தால், எல்லாமே நிலைத்து நிற்கும்.'

இந்த இரண்டாவது வரியை அல்லாஹ் தஆலா அன்னாருக்கு வஹீ மூலம் அறிவித்திருந்தான். எனவே, இறையச்சமே அசல் வேர் ஆகும். இது நம்மிடம் இருக்கும் வரை நாம் நமது நோக்கத்திலும் வெற்றி பெற்றுக் கொண்டே இருப்போம். திருக்குர்ஆன் மற்றும் ஷரீஅத் மீது முழுமையான நம்பிக்கை கொள்வதற்கு இறையச்சம் அவசியமாகும். இறை வணக்கங்களை நிறைவேற்றுவதற்கு இறையச்சம் அவசியமாகும். குடும்ப விவகாரங்களில் அழகிய முறையில் நடப்பதற்கு இறையச்சம் அவசியமாகும்.

இஸ்லாத்தில் எல்லாரையும் விட மிகவும் கண்ணியமானவர் இறையச்சமுடையவரே ஆவார். தான் இறையச்சம் கொண்டவர்களின் நண்பனும், உதவியாளனும் ஆவேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். மேலும், அவன் இறையச்சம் கொண்டவர்களை நேசிக்கிறான், மேலும் இறையச்சமுடையவர்களின் முடிவே மிகச் சிறந்ததாக இருக்கும் என்று கூறுகிறான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முழுமையாக கீழ்ப்படிவதற்கும் இறையச்சம் அவசியமாக்கப்பட்டுள்ளது.

நாங்கள் ஜமாஅத்துடன் இணைந்திருக்கிறோம்; ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பைஅத்தில் வந்துவிட்டோம்; நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது முழுமையாக நம்பிக்கை கொள்கிறோம்; அல்லாஹ் தஆலா மீது முழுமையாக நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று எவ்வளவுதான் உறுதிமொழி எடுத்துக் கொண்டிருந்தாலும், கோஷங்களை எழுப்பிக் கொண்டே இருந்தாலும் சரி; நம்மிடம் இறையச்சம் இல்லையென்றால், பின்னர் இந்த கோஷங்கள் வெறும் கோஷங்களாகவே ஆகும். **வெற்றிக்கு இறையச்சத்தை அல்லாஹ் நிபந்தனையாக விதித்துள்ளான்.**

அல்லாஹ் திருக்குர்ஆனின் எண்ணற்ற இடங்களில் இறையச்சத்தின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தியுள்ளான். நீங்கள் இறையச்சத்தில் முன்னேற முயற்சி செய்யுங்கள் என்று அல்லாஹ் அறிவுறுத்தியுள்ளான்.

நீங்கள் இறையச்சத்தில் முன்னேறினால், ஈமானிலும் இறை நெருக்கத்தைப் பெறுவதிலும் முன்னேறுவீர்கள். நாம் வெற்றி பெற வேண்டுமானால், நம்மைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டுமானால், அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற வேண்டுமானால், பின்னர் அதற்கு நாம் இறையச்சம் கொண்டவர்களாக ஆக வேண்டும்.

'இது அல்லாஹ்விடமிருந்து அருளப்பட்ட வேதம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை; இது இறையச்சம் கொண்டவர்களுக்கு நேர்வழியாகும்' என்று அல்லாஹ் திருக்குர்ஆனின் தொடக்கத்திலேயே கூறியுள்ளான்.

அதாவது, உங்களிடம் இறையச்சம் இருக்கும்போது மட்டும் தான் நீங்கள் அல்லாஹ்வின் வேதத்திலிருந்தும், அதன் தூதுச் செய்தியிலிருந்தும், அதன் ஷரீஅத்திலிருந்தும் பயனடைய முடியும் என்பதை அல்லாஹ் தெளிவுபடுத்தியுள்ளான்.

எனவே, இறையச்சம் இன்றி இஸ்லாத்தில் மனிதனுக்கு எந்த அந்தஸ்தும் இல்லை என்ற இந்த விஷயத்தை எப்போதும் நீங்கள் உங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறையச்சத்தின் வழிகளைக் கற்றுக் கொடுப்பதே திருக்குர்ஆன் இறக்கப்பட்டதன் முக்கிய நோக்கமாகும் என்று திருக்குர்ஆனே கூறியுள்ளது.

அல்லாஹ் மற்றோர் இடத்தில் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

நம்பிக்கையாளர்களுக்கு இந்த திருக்குர்ஆனில் அல்லாஹ் குணத்தையும், கருணையையும் வைத்துள்ளான்; ஆனால் அநீதியாளர்களுக்கு இது பாதிப்பை மட்டுமே அதிகப்படுத்துகின்றது. எவர்களிடம் இறையச்சம் இல்லையோ அவர்களுக்கு திருக்குர்ஆனால் எந்த நேர்வழியையும் காட்ட முடியாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நமது ஷரீஅத்திலும், திருக்குர்ஆனிலும் வழங்கப்பட்டுள்ள கட்டளை இதுவே ஆகும். அதாவது, நீங்கள் பார்வைகளைத் தாழ்த்தி வைத்துக் கொள்ளுங்கள். மக்கள் இதன்படி செயல்படத் தொடங்கிவிட்டால், மேலும் இறையச்சத்தின் இந்த நிலை உருவாகிவிட்டால், பின்னர் மனிதன் ஏராளமான பாவங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

இன்றைய சமூகத்தில், உலகை அழிவின் பக்கம் அழைத்துச் செல்லும் பாவங்கள் இவையே ஆகும்.

கூறினார்கள்: பெண்களுடைய அழகைக் குறித்த கதைகளை கேட்காதீர்கள். உங்களுக்கு தடுமாற்றத்தை ஏற்படுத்தும் அந்த அனைத்து வேலைகளிலிருந்தும் விலகிக் கொள்ளுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமலும், மேலும் அவர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் தொழுகையை போன்றவற்றை நிறைவேற்றாமலும் இரட்சிப்பு கிடைக்க முடியாது. நாங்கள் உண்மையாளர்கள் ஆவோம் என்று மற்ற மதங்களைச் சேர்ந்தவர்களும் வாதம் செய்கின்றார்களே என்று சிலர் கேட்கின்றார்கள். ஆனால் உண்மை என்னவென்றால், இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எந்த மதமும் 'முழு உலகத்திற்காகவும் வந்துள்ளது' என்று வாதம் செய்யவில்லை.

மனிதனின் வேலை என்னவென்றால், (இறைவனிடம்) வேண்டுவதிலிருந்து நின்று விடக் கூடாது. மேலும் அல்லாஹ்வின் அன்பினை அவனிடமே தொடர்ந்து வேண்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

எனவேதான் எவர்கள் தொழுகையை நிலைநாட்டுகிறார்களோ அவர்களே இறையச்சமுடையவர்கள் என்று அல்லாஹ் தஆலா கூறியிருக்கிறான். மேலும் எந்தப் பொருள் விழுவதற்கு ஆயத்தமாக இருக்கின்றதோ அந்தப் பொருளே நிலைநிறுத்தப்படுகின்றது. மனித முயற்சிகள் அல்லாஹ் தஆலாவின் அருளின்றி பயனற்றவையாகும்.

எனவே, எந்தளவுக்கு சாத்தியமோ, அந்தளவுக்கு இறையச்சத்தின் வழியில் தொழுகையை நிலைநிறுத்த அவர்கள் முயற்சி செய்ய வேண்டும்; பின்னர், அவர்கள் எனது வேதத்தின் மீது நம்பிக்கை கொள்கின்றனர் என்றால், அவர்களின் முயற்சியிலும், உழைப்பிலும் நான் அவர்களை விட்டு விட மாட்டேன்; மாறாக, அவர்களுக்கு நான் உதவி செய்வேன். அப்போது அவர்களின் தொழுகையில் வேறு ஒரு தனித்துவமான வடிவம் உருவாகி விடும். வேறொரு தன்மை அதில் உருவாகி விடும். அதை அவர்கள் கற்பனை செய்து கூட பார்த்திருக்க மாட்டார்கள் என்று அந்த கண்ணிய மிக்க இறைவன் கூறியுள்ளான்.

அடுத்து, அதே போன்று பொருளாதார ரீதியிலான இறை வணக்கமும் ஆகும். மனிதனால் செய்ய முடிந்த பணி என்னவென்றால், அவன் தனது விருப்பமான செல்வத்திலிருந்து சிறிது இறைவனுக்காகக் கொடுக்க வேண்டும். எனவேதான், 'நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து அவர்கள் செலவு செய்பவர்கள் ஆவர்' என்று அல்லாஹ் கூறுகிறான்.

மேலும் அல்லாஹ் கூறினான்: மனிதனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள எல்லா வகையான அருட்கொடையிலிருந்தும், உதாரணமாக அவனது உயிர், ஆரோக்கியம், அறிவு, ஆற்றல் மற்றும் செல்வம் போன்றவற்றிலிருந்து மனிதன் செலவு செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து அவர்கள் செலவு

இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம்....

# ஜுமுஆ பேருரை

## நன்றியுணர்வு தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளும் செயல் முன்மாதிரிகளும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 14 ஆகஸ்ட் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **ஸஹுர்** மாதம் **14 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۞ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۞ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۞ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۞ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۞

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۞

நன்றி உணர்வை வெளிப்படுத்துதல் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போதனைகள் வழங்கியுள்ளார்கள். அது தொடர்பாக அன்னார் (ஸல்) நிலைநாட்டிய முன்மாதிரிகளைப் பற்றி நான் கடந்த குத்பாக்களில் எடுத்துரைத்திருந்தேன். அதன் உயர் தரத்தை இந்த காலத்தில் அன்னாரின் உண்மை பேரன்பர் எவ்வாறு புரிந்தார்கள்? மேலும், பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு சான்றுகளுடன் எவ்வாறு முன்வைத்தார்கள்? இது குறித்து இன்று நான் சிலவற்றைக் எடுத்துரைப்பேன்.

அதேபோன்று அன்னாருடைய சொந்த செயல்கள் எவ்வாறு இருந்தன? வீட்டில் குழந்தைகளுக்கு இது குறித்து எவ்வாறு அறிவுரைகள் வழங்கி வந்தார்கள்? ஓர் அஹ்மதியிடம் அன்னார் (அலை) என்ன எதிர்பார்ப்பு வைத்து வந்தார்கள்? இந்த விஷயங்கள் இந்த காலத்தில் நமக்கு செயல்திட்டமாக இருக்கின்றன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் நுட்பமான ஞானத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்:

'மனிதன் ஏதேனும் ஓர் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்று விடும்போது, பின்னர் அவன் ஆணவம் கொண்டவனாக ஆகிவிடுகிறான். ஆனால், அந்த காலகட்டத்தில் அவனால் ஏராளமான நற்செயல்களை செய்ய முடியும். மேலும் மனிதகுலத்திற்கு நன்மை பயக்க முடியும்.

அல்லாஹ் தஆலா திருக்குர்ஆனில் கூறுகிறான்:

நீங்கள் எனக்கு நன்றி செலுத்தினால், நான் உங்களுக்கு எனது அருட்கொடைகளை நிச்சயமாக மேலும் அதிகப்படுத்துவேன்; மாறாக, நீங்கள் நன்றிகொன்றவர்களாய் விடுவீர்களாயின், நிச்சயமாக எனது தண்டனை மிகவும் கடுமையானதாகும். (இப்ராஹீம்: 8)

அதாவது, மனிதன் மீது அல்லாஹ் தஆலாவின் அருட்கொடைகள் இருக்கும்போது, அவன் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வேண்டும். மேலும் (சக) மனிதர்களின் நலனில் அக்கறை கொள்ள வேண்டும். ஒருவேளை ஒருவர் அவ்வாறு செய்யாவிட்டால், மேலும் அநீதி இழைக்கத் தொடங்கி விட்டால், பின்னர் அல்லாஹ் தஆலா அவனிடமிருந்து அந்த அருட்கொடைகளைப் பறித்துக் கொள்கிறான். மேலும், அவனுக்கு தண்டனையளிக்கிறான். (மல்ஃபூஸாத், தொகுதி 10, பக்கம் 200, 2022 பதிப்பு)

மற்றோர் இடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

'எல்லாவற்றையும் விட முதன்மையான விஷயம் என்னவென்றால், எவன் நமக்கு வாழ்வளித்தானோ, ஆரோக்கியத்தையும், சுகத்தையும் நல்கினானோ, அமைதியை வழங்கினானோ, மேலும் மார்க்கத்தைப் பரப்புவதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தானோ அந்த அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். இறைவனின் இந்த அருட்கொடைகளை நாம் எண்ணிப் பார்க்க விரும்பினால், பின்னர் ஒருபோதும் அவனது உதவிகளையும், கருணைகளையும் எண்ணிப் பார்ப்பது சாத்தியமில்லை என்பதுதான் உள்ளபடியே உண்மையான விஷயமாகும்'. (மல்ஃபூஸாத், தொகுதி 10, பக்கம் 330 331, 2022 பதிப்பு)

மற்றொரு சந்தர்ப்பத்தில் அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

'முஸ்லிம்கள் அல்லாஹ் தஆலாவிற்கு அதிகம் நன்றி செலுத்த வேண்டும். ஏனெனில் அவன் அவர்களுக்கு எத்தகைய ஒரு மார்க்கத்தை வழங்கியுள்ளான் என்றால், அது அறிவுப் பூர்வமாகவும், செயல் ரீதியாகவும் அனைத்து விதமான குழப்பங்கள், வெறுக்கத்தக்க விஷயங்கள் மற்றும் அனைத்து வகையான தீமைகளிலிருந்தும் தூய்மையானதாக உள்ளது. மனிதன் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால்,அனைத்துப் புகழ்களுக்கும், பண்புகளுக்கும் உண்மையான தகுதி படைத்தவன் அல்லாஹ் தஆலா மட்டுமே என்பதும், வேறு எந்த மனிதனோ, படைப்போ உண்மையான புகழுக்குத் தகுதியானவர் கிடையாது என்பதும் அவனுக்குத் தெரியவரும். மனிதன் எந்தவொரு சுயநலமும் இன்றி பார்த்தால், ஒருவன் புகழுக்குரியவனாகக் கருதப்படுகிறான் என்றால், இந்த சில காரணங்களால் மட்டுமே அதற்கு உரியவனாக இருக்க முடியும் என்பது (மனிதனாகிய) அவனுக்குத் தெள்ளத் தெளிவாக வெளிப்பட்டு விடும்.

அதாவது, ஒன்று அவன் எந்தவோர் இருப்பும் இல்லாத காலத்தில், மேலும் எவரைப் பற்றியும் அறியாத காலத்தில், (மனிதனாகிய) அவனைப் படைத்தவனாக (புகழுக்குரிய இறைவனாகிய) அவன் இருக்க வேண்டும். அல்லது வாழ்வின் இருப்பு, நிலைத்தன்மை, உடல் ஆரோக்கியத்தின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கு என்னென்ன காரணிகள் அவசியமாகும் என்று எதுவுமே அறியப்படாத ஒரு காலத்தில் (இறைவனாகிய) அவன் அனைத்தையும் ஏற்பாடு செய்திருக்க வேண்டும்; அல்லது (மனிதனாகிய) அவனை பல துன்பங்கள் சூழ்ந்திருப்பதற்கு வாய்ப்பிருந்த அந்தக் காலத்தில் (இறைவனாகிய) அவன் கருணை புரிந்து அவனைக் காத்திருக்க வேண்டும்; அல்லது உழைப்பவரின் உழைப்பை வீணாக்காமல் மேலும் உழைப்பவருக்குரிய உரிமைகளை முழுமையாக நிறைவேற்றுவதன் காரணமாக (இறைவனாகிய) அவன் புகழப்படுவதற்கு தகுதியானவனாக இருக்கலாம்; மேலும், வெளிப்படையாகப் பார்த்தால் ஊழியம் செய்பவரின் உரிமைகளைக் கொடுப்பது ஈடு செய்வதே என்றாலும், முழுமையான முறையில் உரிமைகளை நிறைவேற்றுபவரும் பெரும் நன்மை புரிபவராகவே இருக்க முடியும்.

எனவே இவை பல்வேறு விஷயங்களாகும். இந்த விஷயங்கள் இல்லாவிட்டாலும், ஒருவர் உதவி செய்தால் அப்போதும் அவரைப் புகழ முடியும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: 'இவை உயரிய நற்குணங்களாகும்; இவை ஒருவரைத் துதிக்கும், புகழுக்கும் தகுதியானவராக்குகின்றன.'

இப்போது சிந்தித்துப் பாருங்கள்! உண்மையான முறையில் இந்த அனைத்துப் புகழ்களுக்கும் தகுதியானவன் அல்லாஹ் மட்டுமே ஆவான். 'நான் விவரித்த இந்த மூன்று அல்லது நான்கு விஷயங்களில், அவை அனைத்திற்கும் உரியவன் அல்லாஹ் மட்டுமே ஆவான். யார் இந்த குணங்களை முழுமையாகப் பெற்றிருக்கிறாரோ, அவனே அல்லாஹ் ஆவான். வேறு எந்த நபரிடமும் இந்த குணங்கள் இல்லை. இந்த குணங்கள் அமையப் பெற்ற வேறு எந்தவொரு படைப்பும் இல்லை'.'

(ரூஹானி கஸாயின், தொகுதி 15, பக்கம் 597-598)

இஸ்லாத்தின் மறுமலர்ச்சி மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத் நிறுவப்பட்டதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதன் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

' அறிவுடையவர்களே! தேவையுடைய இந்தக் காலத்திலும், இந்த அடர்ந்த இருள் நிறைந்த நாட்களிலும், இறைவன் ஒரு விண்ணுலக ஒளியை இறக்கியிருப்பதைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படாதீர்கள்! மேலும், பொதுப்படையான நன்மைக்காகவும், குறிப்பாக இஸ்லாமிய கலிமாவை உயர்த்துவதற்காகவும், அகிலத்தின் மேன்மையாளரான ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஒளியைப் பரப்புவதற்காகவும், முஸ்லிம்களுக்கு ஆதரவளிப்பதற்கும், மேலும் அவர்களின் உள்ளார்ந்த நிலையைத் தூய்மைப்படுத்தும் எண்ணத்துடன் அல்லாஹ் ஓர் அடியானைத் தேர்ந்தெடுத்து உலகிற்கு அனுப்பியுள்ளான்.

இந்த விஷயத்தில்தான் ஆச்சரியம் அடைந்திருக்க வேண்டும். அதாவது, நான் எப்போதும் திருக்குர்ஆன் போதனைகளைப் பாதுகாப்பேன் என்றும், மேலும் அதை

ஒருபோதும் செயலிழக்கவோ, ஒளியிழக்கவோ விடமாட்டேன் என்றும் இஸ்லாமிய மார்க்கத்தின் பாதுகாவலனான அந்த இறைவன் வாக்குறுதி அளித்திருந்தான்; (ஆனால்) அவன் இந்த இருளைப் பார்த்த பிறகும், மேலும் அந்த உள்ளார்ந்த மற்றும் வெளிப்புறக் குழப்பங்களைக் கண்ட பிறகும் அமைதியாக இருக்கின்றானே! மேலும், தன் பரிசுத்த வேதத்தில் தான் அளித்த உறுதியான வாக்குறுதியை அவன் மறந்து அமைதியாக இருப்பானா? என்றல்லவா அவர்கள் ஆச்சரியமடைந்திருக்க வேண்டும்.

அல்லாஹ் எந்த அன்பளிப்பை அனுப்பியுள்ளானோ அதுவே அல்லாஹ் அளித்த வாக்குறுதிக்கு ஏற்ப அமைந்துள்ளதாகும். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அல்லாஹ் இந்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் இருந்திருந்தால், பின்னர் இஸ்லாத்தின் வீழ்ச்சியின் தொடர் தொடர்ந்து கொண்டிருந்திருக்கும்.

அடுத்து, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

மீண்டும் நான் கூறுகிறேன்: 'ஆச்சரியம் கொள்வதற்கு ஓர் இடம் இருந்தால் அது இதுவாக இருந்தது. அதாவது, ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் அல்லாஹ்தஆலா எத்தகைய ஓர் அடியாரை அனுப்புவான் என்றால், அவர் அவனது மார்க்கத்தைப் புதுப்பிப்பார் என்ற அந்தப் பரிசுத்தத் தூதரின் (ஸல்) அவர்களின் இந்தத் தெளிவான மற்றும் வெளிப்படையான முன்னறிவிப்பு தவறாக அமைந்திருந்தால் ஆச்சரியப்பட்டிருக்கலாம்.

ஆக, இது ஆச்சரியப்பட வேண்டிய இடம் அல்ல. மாறாக பல்லாயிரக்கணக்கான நன்றிகளுக்கான நேரமாகும். மேலும், நம்பிக்கை மற்றும் ஈமானை அதிகரிப்பதற்கான நேரமாகும்.'

மேலும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகை வரை, ஒவ்வொரு நூற்றாண்டிலும் பல்வேறு சமுதாயங்களில் முஜத்தித்துகள் வந்து கொண்டே இருந்ததை நாம் காண்கிறோம். மேலும் அல்லாஹ் தஆலா அன்னாரை பின்னர் இறுதி ஆயிரம் ஆண்டுகளுக்கான முஜத்தித்தாக ஆக்கி, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் அந்தஸ்தைக் கொடுத்து அனுப்பினான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: 'இது ஆயிரக்கணக்கான நன்றிகளுக்குரிய இடமாகும். மேலும், நம்பிக்கை மற்றும் ஈமானை அதிகரிப்பதற்கான நேரமாகும். ஏனெனில், அல்லாஹ் தஆலா தனது அருள் மற்றும் கருணையினால் தனது வாக்குறுதியை நிறைவேற்றி விட்டான். மேலும் தனது தூதரின் முன்னறிவிப்பில் ஒரு நிமிடம் கூட மாற்றம் ஏற்பட அனுமதிக்கவில்லை. மேலும், இந்த முன்னறிவிப்பை நிறைவேற்றிக் காட்டியது மட்டுமின்றி, எதிர்காலத்திற்காகவும் ஆயிரக்கணக்கான முன்னறிவிப்புகள் மற்றும் அற்புதங்களின் கதவையும் திறந்து விட்டான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் மூலம் அல்லாஹ் தஆலா மேலும் ஏராளமான முன்னறிவிப்புகளை நிறைவேற்றினான்.'

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருந்தால், நன்றி செலுத்துங்கள். உங்களின் மூதாதையர்கள் எந்தக் காலத்திற்காகக் காத்திருந்து, காத்திருந்து காலம் சென்று விட்டார்களோ, மேலும் எண்ணற்ற ஆன்மாக்கள் எந்த ஆவலில் பயணித்து சென்று விட்டனவோ அந்தக் காலத்தை நீங்கள் பெற்று கொண்டீர்கள் என்பதற்காக நன்றி ஸஜ்தாக்களைச் செய்யுங்கள்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகைக்காகப் முந்தைய முஸ்லிம்கள் காத்திருந்தனர்; ஆலிம்கள் காத்திருந்தனர்; பெரியோர்கள் காத்திருந்தனர்; ஆனால் அவர்களால் அதை அடைய முடியவில்லை.

அன்னார் (அலை) கூறினார்கள்:

'நீங்கள் அந்தக் காலத்தைப் பெற்று விட்ட நற்பேறு பெற்ற மக்களாவீர்கள். இப்போது அல்லாஹ் தஆலாவுக்கு நன்றி செலுத்துங்கள். இனி இதற்கு மதிப்பளிப்பதும், மதிப்பளிக்காமல் இருப்பதும், இதைப் பயன்படுத்துவதும், பயன்படுத்தாமல் இருப்பதும் உங்கள் கைகளில் உள்ளது. நான் இதை மீண்டும், மீண்டும் எடுத்துரைப்பேன். இதை வெளிப்படுத்துவதிலிருந்து என்னால் நிற்க முடியாது; படைப்புகளின் சீர்திருத்தத்திற்காக இந்த நேரத்தில் அனுப்பப்பட்டவன் நானே ஆவேன். மார்க்கத்தை மக்களின் இதயங்களில் புத்தம் புதிதாக நிலைநாட்டும் பொருட்டு அல்லாஹ் தஆலா எனது வடிவில் வாக்குறுதியை நிறைவேற்றினான்.

(ஃபத்ஹே இஸ்லாம், ரூஹானி கஸாயீன் தொகுதி 3, பக்கம் 6 முதல் 8 வரை)

அந்தோ! அன்னாரின் எதிரிகளும், அன்னாரை ஏற்றுக் கொள்ளாத முஸ்லிம்களும் இந்த விஷயத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமே! மேலும், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவர்களாக திகழ்ந்தவாறு, அல்லாஹ் அனுப்பியவரை ஏற்றுக் கொள்ள வேண்டுமே! மேலும், தங்களை ஒற்றுமை எனும் மாலையில் இணைத்துக் கொள்ள வேண்டுமே! அவ்வாறு செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இதன் மூலம், இன்றைய நாட்களில் முஸ்லிம்கள் எந்த இன்னல்களை சந்தித்துக் கொண்டிருக்கின்றனரோ அதிலிருந்து அவர்கள் தப்பிக்க முடியும்.

உண்மையைத் தேடும் ஒருவரை விளித்தவாறு ஹஸ்ரத் அக்தஸ் (அலை) கூறினார்கள்:

'அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில், அவன் சரியான நேரத்தில் உதவி செய்துள்ளான். மேலும், இந்த அமைப்பை நிறுவியுள்ளான். எனவே, உங்களுக்கு வழங்கப்பட்ட இந்த அருளை வீணடிக்காமல், மரியாதையுடனும், கண்ணியத்துடனும் பார்ப்பது உங்களுக்கு உகந்ததாகும். மேலும், அல்லாஹ்வின் உதவியின்றியும், அவனது அழைப்பு இன்றியும் எந்தவொரு நபராலும் உண்மையுடனும், முழு பலத்துடனும் ஒரு விஷயத்தை எடுத்துரைக்க முடியாது என்பதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள். அவன் இன்றி எந்தச் சான்றுகளும் கிடைப்பதில்லை.' அல்லாஹ்வின் உதவி இருக்கும்பட்சத்தில் மட்டுமே சான்றுகள் கிடைக்கின்றன. எடுத்துரைக்கும் வழிமுறையும் வழங்கப்படுவதில்லை.

'மேலும், இந்த விவரிப்பு முறையும் அல்லாஹ்வின் சிறப்பு மிக்க அருளாகும்; ஏனெனில், இந்த விவரிப்பு முறையின் மூலம் நன்மையின் ஆற்றலை கொண்டவர்கள், இறைவனின் ஆற்றல் மற்றும் சக்தியைப் பெற்று பரிசுத்த ஆவியின் பலத்தால் நிரம்பப்பட்டு பேசுகின்ற அந்த நபரை அடையாளம் கண்டுகொள்கிறார்கள். இதுவும் அல்லாஹ்வின் சிறப்பான அருளாகும். அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவரை மக்கள் அடையாளம் கண்டு கொள்வது என்பது அல்லாஹ்வின் அருளாகும்.'

எனவே அவன் உங்களுக்கு இந்த ஆற்றலை வழங்கியுள்ளான்; மேலும், அடையாளம் காணும் கண்ணை வழங்கியுள்ளான். இது உங்கள் மீது அல்லாஹ் செய்த மாபெரும் கருணையாகும்.'

உண்மையைத் தேடுபவரிடம் அன்னார் (அலை) கூறினார்கள்:

'உங்களுக்கு உண்மையைத் தேடும் ஆர்வம் உள்ளது; எனவே அல்லாஹ் உங்களுக்கு இந்த அறிவை வழங்கியுள்ளதற்காக நீங்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள். தங்களை பெரிய ஆலிம்களாகக் கருதிக் கொள்ளும் ஏராளமான நபர்கள் உள்ளனர். ஆனால் அவர்களுக்கு அறிவு இருப்பதில்லை; அவர்கள் எதிர்ப்பில் முன்னேறிக் கொண்டே செல்கின்றனர். ஆனால், அல்லாஹ் உங்களுக்கு அறிவைத் தந்ததற்காக நீங்கள் நன்றி செலுத்துங்கள். அல்லாஹ்வின் பெரும் பெரும் கருணைகள் உள்ளன.

அன்னார் (அலை) கூறினார்கள்:

'ஒருவேளை அவன் இந்த அருள் புரியாமல் இருந்திருந்தால், பின்னர் மற்றவர்கள் திரைக்கு பின்னால் இருந்து கொண்டு வசைபாடுவதைப் போன்று, நீங்களும் அவர்களை சார்ந்தவராக இருந்திருப்பீர்கள். எனவே, எவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனரோ அவர்கள் நற்பேறு பெற்றவர்கள் ஆவர்.' 'எந்த விஷயம் உங்களை ஈர்த்ததோ, அது முற்றிலும் அல்லாஹ்வின் அருளேயாகும்.'

அடுத்து, அன்னார் (அலை) ஓர் உதாரணம் வழங்கியுள்ளார்கள்.

உதாரணமாக, 'மியா(ன்) அப்துல் ஹக் அவரையே பாருங்கள்! அல்லாஹ்வின் அருள் அவர்களுக்கு ஆதரவாக இல்லாமல் இருந்திருந்தால், பின்னர் எப்படி அவரால் அந்த சுகபோகமான வாழ்க்கையிலிருந்து வெளியேறியிருக்க முடியும்?

இங்கே அன்னார் (அலை) கூறும் உதாரணமாக விளங்கும் மியா (ன்) அப்துல் ஹக் ஸாஹிப் என்பவர், கஸூரைச் சேர்ந்த முன்ஷீ அப்துல் ஹக் ஆவார். அவர் ஒரு மாணவராக இருந்தார்; அந்த காலத்திலேயே பி.ஏ. படித்து வந்தார். அவர் முஸ்லிமாக இருந்தபோதிலும், அன்னார் (அலை) எடுத்துரைத்துக்கும் அந்த காலத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு முன்பு கிறிஸ்தவராக மாறியிருந்தார்.

பிறகு, அல்ஹகம் மற்றும் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் சில நூல்களைப் படித்துவிட்டு, ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் சமூகத்தில் இவ்வாறு ஒரு கடிதம் எழுதினார்:

'நான் இஸ்லாத்தின் உண்மையையும், ஞானத்தையும் செயல்வடிவில் காண விரும்புகிறேன். எனக்கோ இஸ்லாத்தில் எதுவுமே தென்படவில்லை.' எனவே நான் செயல்வடிவில் காண விரும்புகிறேன்.

அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு இவ்வாறு எழுதினார்.

அதற்கு, நீங்கள் குறைந்தது இரண்டு மாதங்களாவது இங்கு காதியானில் வந்து தங்குமாறு அவருக்கு ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் கடிதம் எழுதி அனுப்பினார்கள். அதன்படி, அவர் தாருல் அமானை நோக்கி பயணம் மேற்கொண்டு அங்கு வந்தடைந்தார்.

மேலும், 1901 ஆம் ஆண்டில் நிகழ்ந்த சம்பவமாகும். அதாவது அவர் அங்கு வந்து சேர்ந்தார். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் தங்கினார். குறிப்பாக எத்தகைய சூழ்நிலையில் அவர் அங்கு வந்தார் என்றால், அவருடைய பல நலன்விரும்பிகளும் ஒன்று கூடிவிட்டனர். அதாவது,' எத்தகைய சூழ்நிலையில் அவர் அங்கு வந்து சேர்ந்தார் என்றால்,' அவர் அங்கு வருவதற்கு எண்ணம்

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

கொண்டபோது, காதியானுக்குச் செல்ல வேண்டாம்' என்று பல மக்கள் அவர்களுக்கு அறிவுரை வழங்கினர். மேலும், காதியானுக்குச் செல்ல வேண்டாம் என்று கூறி அவர்கள் அவரைத் தடுக்கவும் செய்தனர். இன்னும் கூறப்போனால், ஒருவர் ஏசிபேசவும் செய்தார். ஆனால், அவர்களின் மதத்தில் (பிறரை) வசைபாடுவது தடுக்கப்பட்டுள்ளது. மேலும், பொதுவாக (அவ்வாறு செய்வது) நாகரீகத்திற்கும், நற்பண்புகளுக்கும் எதிரானதாகும். ஆயினும், இந்த அனைத்து விஷயங்களையும் இறைவனின் அருள் மேலோங்கி விட்டது. மேலும் அது அவரை (காதியான்) ஈர்த்துக் கொண்டு வந்தது. மேலும், அவருக்குத் தீமைக்கான காரணிகளே கிடைக்கவில்லை. அக்காலத்தில் அவருக்குத் திருமணம் ஆகியிருக்கவில்லை. ஏனெனில், 'சில முறை திருமணத்தின் காரணமாகவும் பெரும் சிக்கல்கள் உருவாகின்றன'.

ஒருவேளை அவருக்கு திருமணமாகியிருந்தால், மீண்டும் ஒரு சோதனை வந்திருக்கும்; ஆனால், இறைவனே எல்லா வகையிலும் காப்பாற்றினான். இறைவனின் அருள் என்பது முஸ்தஹ்தஸ்' (புதிதாக உருவாக்கப்பட்டது) அன்று. அதாவது, அது புதிதாக உருவாக்கப்படுவது அல்ல. இது அல்லாஹ் தஆலாவின் அருளாக இருக்கின்றது. யார் மீது அவன் தன் கருணையைக் காட்டுகிறானோ, அவரை எல்லா வழிகளிலும் பாதுகாக்கின்றான். 'இது ஒன்றும் புதிய விஷயம் அல்ல. அல்லாஹ் தஆலாவோ யார் மீது தன் கருணையைக் காட்டுகிறானோ, அவரை எல்லா வழிகளிலும் காப்பாற்றுகிறான்'. நாங்கள் முஸ்லிம்கள் என்பதில் மட்டும் திருப்தியடைந்துவிட வேண்டாம் .இஸ்லாம் பெரும் அருட்கொடையாகும்.அதற்கு மதிப்பளியுங்கள்; மேலும், நன்றி செலுத்துங்கள்; மேலும், அதற்குள் இருக்கும் தத்துவமானது வெறும் வாயால் கூறிவிடுவதால் மட்டும் கிடைத்துவிடாது.

(மல்ஃபூஸாத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத், பாகம் 2, பக்கங்கள் 435-436, பதிப்பு 2022) (மல்ஃபூஸாத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத், பாகம் 2, பக்கங்கள் 515-516, பதிப்பு 2022) (உருது அகராதி, தொகுதி 17, பக்கம் 986)

வெறும் முஸ்லிம் என்று சொல்வதால் மட்டும் விவகாரம் முழுமையடைந்துவிடாது. என்னென்ன விஷயங்கள் உள்ளனவோ, என்ன அமல்கள் இருக்கின்றனவோ, என்ன போதனை இருக்கின்றதோ அதன்படி செயல்படவும் வேண்டும்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது பற்றும், அன்பும் கொண்டவர்களுக்கு நன்றி செலுத்தியவாறு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

'அல்லாஹ் தஆலாவின் அருளும், கருணையும் என்னைத் தனித்தவனாக விட்டுவிடவில்லை என்ற இந்த விஷயத்தை வெளிப்படுத்தாமலும், அதற்காக நன்றி செலுத்தாமலும் என்னால் இருக்க முடியாது.

என்னுடன் சகோதரத்துவ உறவை ஏற்படுத்திக் கொள்ளக் கூடியவர்கள் மற்றும் எந்த இயக்கத்தை அல்லாஹ்தஆலா தனது சொந்த கரங்களால் நிறுவியுள்ளானோ அந்த இயக்கத்தில் இணையக் கூடியவர்கள், அன்பு மற்றும் உண்மையான பற்றின் நிறத்தால் ஒரு விநோதமான வடிவில் வண்ணம் தீட்டப்பட்டுள்ளனர். இது என்னுடைய உழைப்பினால் அல்ல; மாறாக அல்லாஹ்தஆலா தனது சிறப்பு மிக்க அருளால் உண்மையால் நிறைந்த ஆன்மாக்களை எனக்கு வழங்கியுள்ளான்.

அஹ்மதிய்யத்திற்கு வந்துள்ள தூயவர்களைப் புகழ்ந்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

உண்மையால் நிறைந்த இந்த ஆன்மாக்களை (இறைவன்) எனக்கு வழங்கியுள்ளான். ' 'எல்லாரையும் விட முதலில், எனது ஒரு ஆன்மிக சகோதரரைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு நான் இதயத்தில் உத்வேகத்தை உணர்கிறேன். அவருடைய பெயர் அவரின் தூய்மையின் ஒளியைப் போன்று 'நூருத்தீன்' (மார்க்கத்தின் ஒளி) ஆகும். இஸ்லாத்தின் கலிமாவை உயர்த்த அவர் தமது ஹலாலான செல்வத்திலிருந்து அவர் சில மார்க்கச் சேவைகளை செய்து வருகின்றார். அந்தச் சேவைகளை நானும் செய்திருக்க வேண்டுமே என்று நான் எப்போதும் ஏக்கத்துடன் பார்க்கிறேன்.

'இப்போது பாருங்கள்! அன்னார் (அலை) இஸ்லாத்திற்காக எந்த அளவு தொண்டாற்றிக் கொண்டிருந்தார்கள். இருந்தபோதிலும் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் மௌலானா நூருத்தீன் ஸாஹிபின் தியாகங்களைப் பார்த்து, எனக்கு நானும் இவ்வளவு பொருளாதார தொண்டுகளை செய்திருக்க வேண்டுமே என்று எனக்கு மிகவும் ஏக்கம் ஏற்படுகிறது'. மார்க்கத்தின் உதவிக்காக அன்னாரின் இதயத்தில் நிறைந்திருக்கும் ஆர்வத்தை எண்ணிப் பார்க்கும்போது, இறைவன் எவ்வாறு தனது அடியார்களைத் தன் பக்கம் ஈர்த்து விடுகிறான் என்ற இறை வல்லமையின் சித்திரம் என் கண்களுக்கு முன்னால் வந்து விடுகிறது. அவர் தமது அனைத்துச் செல்வத்துடனும், அனைத்து வலிமையுடனும், அவருக்கு கிடைத்துள்ள அனைத்து வழிகளுடனும் எப்போதும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கீழ்ப்படிதலுக்காகத் தயாராக நிற்கிறார்கள்.

அதாவது ஹஸ்ரத் முதல் கலீஃபதுல் மஸீஹ் (ரலி) அவர்களைப் பற்றி அன்னார் (அலை) கூறுகின்றார்கள்.

'மேலும் நான் நல்லெண்ணத்தின் அடிப்படையில் (மட்டும்) அல்ல; மாறாக நான் அனுபவத்துடன் இந்த சரியான அறிவை உறுதியாகப் பெற்றிருக்கிறேன். அதாவது அவர் எனது பாதையில் செல்வத்தை மட்டுமல்ல, தனது உயிரையும், கண்ணியத்தையும் கூட தியாகம் செய்யத் தயங்க மாட்டார்; நான் அனுமதி கொடுத்தால், பின்னர் அவர் எல்லாவற்றையும் இந்த வழியில் அர்ப்பணித்து தமது ஆன்மிக நட்பைப் போன்று, தமது பௌதீக நட்பின் உரிமையையும், அதேபோன்று எப்போதும் (எமது) தோழமையில் இருப்பதற்கான உரிமையை நிறைவேற்றி விடுவார்.(ஃபத்ஹே இஸ்லாம், ரூஹானி கஸாயின் தொகுதி 3, பக்கம் 35) அன்னார் (ரலி) நிரந்தரமாக என்னுடம் தங்கிவிடுவார்கள்.

இது 1890ம் ஆண்டு இறுதியில் எழுதப்பட்ட விஷயமாகும். 'ஃபத்ஹே இஸ்லாம்' என்ற அன்னாருடைய புத்தகத்தில் இதை அன்னார் (அலை) எழுதியுள்ளார்கள். பின்னர் ஹஸ்ரத் மௌலானா நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் அனைத்தையும் விட்டுவிட்டு அன்னாரின் சமூகத்தில் வந்து ஆஜராகி விட்டார்கள். மேலும் எப்போதும் அன்னாருடனேயே இருந்தார்கள்.

அல்லாஹ்தஆலாவின் 'ரஹ்மானிய்யத்' (அளவற்ற அருளாளன்) என்ற பண்பின் கீழ் பௌதீக மற்றும் ஆன்மிக அருள்களைப் பற்றிக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

'அனைத்து வல்லமையும் கொண்ட அந்த இறைவனுக்கு லட்சக்கணக்கான புகழ்கள் உரித்தாகட்டுமாக! அவன் எந்தவொரு மூலப்பொருளும் மற்றும் துவக்க மாதிரியும் இன்றி அனைத்து ஆன்மாக்களையும், உடல்களையும் தனது கட்டளையினாலும், அம்ராலும் (இறைக் கட்டளையாலும்) படைத்து, தனது மகத்தான வல்லமைக்கான முன்மாதிரியைக் காட்டினான்; மேலும் அனைத்துப் பரிசுத்த ஆன்மாக்களான நபிமார்களுக்கும் எந்தவொரு ஆசிரியரும், வழிகாட்டியும் இன்றி, அவனே கற்றுக் கொடுத்து, ஒழுக்கப் பயிற்சி அளித்து, தனது பழமையான அருட்கொடைகளின் அடையாளத்தை வெளிப்படுத்தினான்.

அதாவது, அல்லாஹ் தஆலா அனுப்புகின்ற அந்த நபிமார்களுக்கும் அவன் தன் தரப்பிலிருந்து கல்வி வழங்கினான். அவர்களுக்கு தர்பிய்யத் வழங்கினான்.மேலும், அவர்கள் மீது தனது கட்டளைகளை இறக்கினான்.

அன்னார் (அலை) கூறினார்கள்: 'அல்லாஹ் தூய்மையானவன் ஆவான். அவன் எந்த அளவு அருளற்ற அருளாளனாகவும், பெருங்கொடையாளனாகவும் இருக்கிறான்! அவன் எவ்விதத் தகுதியுமின்றி நமக்கு அருளினான்'!

அதாவது, நமக்கு எந்தத் தகுதியும் இல்லாத நிலையிலும், நம் போன்ற பலவீனர்களின் 'அனைத்துப் பணிகளையும் அவனே செய்து கொடுத்தான். நமது பௌதீக வாழ்விற்காக, சூரியன், சந்திரன், மேகங்கள் மற்றும் காற்றுகளைப் பணியில் ஈடுபடுத்தினான்; மேலும், நமது ஆன்மீக ஏற்பாட்டிற்காகத் தவ்ராத், இன்ஜீல், ஃபுர்கான் (திருக்குர்ஆன்) மற்றும் அனைத்து ஆன்மிக வேதங்களையும் தகுந்த நேரத்தில் கொண்டு வந்து சேர்த்தான்.

அடுத்து, அன்னார் (அலை) இவ்வாறு துஆ செய்கின்றார்கள்:

'இறைவா! உனக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்! நீ உன்னை அறிந்து கொள்ளும் வழியை நீயே கூறினாய்! உனது பரிசுத்த வேதங்களை இறக்கி சிந்தனை மற்றும் அறிவின் தவறுகளிலிருந்தும், பிழைகளிலிருந்தும் எங்களைக் காப்பாற்றினாய்! மேலும், ஹஸ்ரத் ஸய்யிதுர் ருஸுல் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீதும், அன்னாரின் குடும்பத்தார் மற்றும் ஸஹாபிகள் மீதும் துரூதும், ஸலாமும் உண்டாகட்டுமாக! இறைவன் அவர்களின் மூலமாக வழிதவறிய ஓர் உலகை நேரான வழியில் நடத்தினான். முரப்பியும், நன்மை பயப்பவருமான அவர் வழிதவறிப்போன படைப்புகளை மீண்டும் நேர்வழியில் கொண்டு வந்தார். அவர் நன்மை செய்பவராகவும், கருணை செய்பவராகவும் இருந்த அவர் இணைவைப்பு மற்றும் சிலைகளின் துன்பத்திலிருந்து மக்களை விடுவித்தார். ஒளியாகவும், ஒளியைப் பரப்புபவராகவும் திகழ்ந்த அவர் உலகத்தில் ஏகத்துவத்தின் ஒளியைப் பரப்பினார். ஞானமிக்கவராகவும், காலத்தின் சிறந்த மருத்துவராகவும் திகழ்ந்த அவர் சீர்கெட்ட இதயங்களை உண்மையில் நிலைநிறுத்தினார். கொடையாளராகவும், அற்புதங்களின் அடையாளமாகவும் திகழ்ந்த அவர் மரணித்தவர்களை வாழ்வளிக்கும் நீரைப் பருகச் செய்தார்'. அதாவது, ஆன்மிக ரீதியாக மரணித்தவர்களாக இருந்தவர்களுக்கு வாழ்வளிக்கும் நீரைப் பருகக் கொடுத்தார்.

இரக்கமுள்ளவராகவும், பரிவு கொண்டவராகவும் திகழ்ந்த அவர் தமது

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

சமுதாயத்தின் துயரங்களைச் சுமந்தார். வேதனைகளைத் தாங்கினார். மரணத்தின் வாயிலிருந்து நம்மை மீட்டெடுத்த அவர் வீரரும் பயில்வானும் ஆவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி அன்னார் (அலை) இவ்வாறு கூறுகின்றார்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்:

மரணத்தின் வாயிலிருந்து நம்மை மீட்டெடுத்த அவர் வீரரும், பயில்வானும் ஆவார். அவர் மென்மை குணம் படைத்தவரும், தன்னலமற்ற மனிதரும் ஆவார். அவர் இறை வணக்கத்தில் தலை வணங்கி நின்றார்.

அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆவார்கள். அன்னார் (ஸல்) தமது சுய இருப்பை மண்ணோடு மண்ணாக ஆக்கிக் கொண்டார். அவர் முழுமையான ஏகத்துவவாதியாகவும், ஞானக் கடலாகவும் திகழ்ந்தார். அவருக்கு இறைவனின் கம்பீரம் விருப்பத்திற்குரியதாக இருந்தது; இறைவன் அல்லாத மற்றவற்றை தம் பார்வையிலிருந்து விலக்கினார்.அவர் ரஹ்மானின் வல்லமையின் அற்புதம் ஆவர்; அவர் கல்வியறிவில்லாதவராக இருந்தபோதிலும், அனைத்து மெஞ்ஞான அறிவுகளிலும் முதன்மை மேன்மை பெற்றார். மேலும் ஒவ்வொரு சமுதாயத்தையும் தவறுகள் மற்றும் பிழைகளுக்கு பொறுப்பாளியாக்கினார்'. (பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 1, ரூஹானி கஸாயீன் தொகுதி 1, பக்கம் 16-17) (உருது அகராதி, தொகுதி 22, பக்கம் 498-499)

இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கான புகழாரமாகும். முதலில் தவ்ராத் மற்றும் இன்ஜீல் ஆகியவற்றின் உதாரணம் கொடுக்கப்பட்டது; ஆனால் எந்த சமுதாயங்களுக்கு தவ்ராத் மற்றும் இன்ஜீல் மூலம் சரியான வழி தென்பட்டதோ, அதன் பின்னர் உலகில் சீர்கேடு உண்டானது. எனவேதான் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அனுப்பினான். மேலும் அன்னார் (ஸல்) அடியார்களை இறைவனுடன் இணைத்தார்கள்.

அடுத்து, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

**'அகிலங்களின் இறைவனே! உனது அருட்கொடைகளுக்கு என்னால் நன்றி சொல்லி மாளாது. நீ! மிகவும் கருணையுள்ளவனும், கொடையாளியும் ஆவாய். என் மீது உனது எண்ணற்ற கருணைகள் உள்ளன. நான் அழிந்துபோகாமல் இருக்க எனது பாவங்களை மன்னிப்பாயாக! எனக்கு உண்மையான வாழ்வு கிடைக்க என் இதயத்தில் உனது தூய அன்பை ஏற்படுத்துவாயாக! மேலும் எனது குறைகளை மறைப்பாயாக! உன்னை திருப்தி அளிக்கச் செய்யும் செயல்களை என்னைக் கொண்டு செய்ய வைப்பாயாக!**

**உனது கோபம் என் மீது இறங்குவதிலிருந்து உனது கொடைமிக்க முகத்தைக் கொண்டு உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். கருணை புரிவாயாக! மேலும், இம்மை மற்றும் மறுமையின் துன்பங்களிலிருந்து என்னைக் காப்பாற்றுவாயாக! ஏனெனில் ஒவ்வோர் அருளும், கொடையும் உனது கரங்களிலேயே உள்ளது. ஆமீன்! ஸும்ம ஆமீன்!'**

(மல்ஃபூஸாத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை), பாகம் 1, பக்கம் 217, பதிப்பு 2022)

அடுத்து, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

'அந்தக் கொடை மிக்க இறைவனுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்! அவன் நமக்கு எப்படிப்பட்ட ஒரு மார்க்கத்தை வழங்கியுள்ளான் என்றால், அது இறை ஞானம் மற்றும் இறையச்சத்திற்கான எத்தகைய ஒரு வழிமுறையாக திகழ்கிறது என்றால், அதற்கு நிகர் ஒருபோதும் எந்தக் காலத்திலும் காணப்படவில்லை. மேலும் ஆயிரமாயிரம் ஸலவாத்துகள் அந்த களங்கமற்ற நபியின் மீது உண்டாகட்டுமாக! (ஏனெனில்) அவர் மூலமாக நாம் இந்தத் தூய்மையான மார்க்கத்தில் நுழைந்தோம். மேலும் ஆயிரமாயிரம் ரஹ்மத்துகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபிகள் மீதும் உண்டாகட்டுமாக! அவர்கள் தங்களது ரத்தத்தைக் கொண்டு இந்தத் தோட்டத்திற்கு நீர்ப்பாசனம் செய்தார்கள்.'

(நுஸ்ரத்துல் ஹக், பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5, ரூஹானி கஸாயீன் பாகம் 21, பக்கம் 25)

அடுத்து, அன்னார் (அலை) மற்றோர் இடத்தில் கூறினார்கள்:

' இறைவனின் பார்வையில் உண்மையாளர்களாகவும், நேர்மையாளர்களாகவும் இருப்பவர்கள், எப்போதும் மூடர்களின் நாவுகளினாலும், கைகளினாலும் துன்பங்களைச் சந்தித்துக் கொண்டே செல்கின்றனர்.

அதாவது 'அல்லாஹ்வின் பார்வையில் நேர்மையாளர்களாகவும் உண்மையாளர்களாகவும் இருப்பவர்கள் (இந்த நிலைக்கு ஆளானவர்கள் ஆவர். உண்மையான முறையில் மார்க்கத்தின் கட்டளைகளை பேணி நடப்பவர்கள் ஆவர். அல்லாஹ்விடம் உண்மையுள்ளவர்களாக இருப்பவர்கள் ஆவர்.

நிகழ்காலத்தில் சில இடங்களில் அஹ்மதிகளும் துன்பங்களுக்கு ஆளாகி வருவது போன்று அவர்கள் மூடர்களின் நாவுகளினாலும் கரங்களினாலும் துன்பங்களுக்கு ஆளாகின்றனர். .

எனவே சிந்தித்துப் பாருங்கள்! அல்லாஹ்வின் பழமையான வழிமுறை இதுவே ஆகும். எனவே, நாமும் நம்மவர்களிடமிருந்தும், அந்நியர்களிடமிருந்தும் துன்பங்களை சுமக்க நேரிட்டால், பின்னர் நாம் நன்றி செலுத்த வேண்டும். மேலும், அவனது வழியில் நமக்கு துன்பங்கள் கொடுக்கப்படும் அளவுக்கு நாம் அந்த உண்மையான நேசனான (இறைவனின்) பார்வையில் தகுதியானவர்களாகக் கருதப்படுகிறோம் என்று நாம் மகிழ்ச்சி கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வின் வழியில் நமக்கு துன்பங்கள் கொடுக்கப்படுகின்றன என்றால், பின்னர் இதுவும் நமது நற்பேறாகும். எனவே நாம் மகிழ்ச்சியடைய வேண்டும்; மேலும், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். ஏனெனில், அல்லாஹ் எவர்களை விரும்புகிறானோ, அவர்களே அவனது பாதையில் துன்பங்களைச் சுமக்கின்றனர். துயரங்களுக்கு ஆளாகின்றனர். மேலும், எனவே, இவ்வாறு துன்பங்களைச் சுமப்பதோ முற்றிலும் நமது நற்பேறாகும்.

ஆனால், மற்றொருபுறம் நாம் பார்க்கின்றோம்; அதாவது மார்க்கத்தின் சில எதிரிகள் தங்களது அவதூறுகளை பரப்புவதின் மூலம் நமக்குத் துன்பம் தருவதோடு மட்டும் நின்றுவிடாமல், விவேகமற்ற மற்றும் அறியாத மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறார்கள். இத்தகைய சூழ்நிலையில், அறியாத மக்களைக் குழப்பத்திலிருந்து முடிந்தவரை காப்பாற்றுவதை நாம் எமது கடமையாக கருதுகிறோம்.

(மஜ்மூஆ இஷ்திஹாராத், தொகுதி 1, பக்கம் 141 - 142)

அதாவது, அவர்களுக்கும் உண்மையை எடுத்துரையுங்கள். மக்களுக்குத் பாதிப்பை விளைவிக்கக் கூடிய (எதிரிகளாகிய) அவர்களின் செய்யும் தீமைகளை வெளிப்படுத்துங்கள். குழப்பத்திலிருந்து காப்பாற்றுவது என்பதன் பொருள், எதிரிகள் பயன்படுத்துவது போன்ற அறிவீனமான மொழியை நாமும் பயன்படுத்துவதோ அல்லது ஒழுக்கக்கேட்டில் இறங்கி விடுவதோ அல்ல. மாறாக, இஸ்லாமியப் போதனைகளின் வரம்பிற்குள் இருந்து கொண்டே அவர்களின் தவறான பிரச்சாரங்களுக்கும், அவதூறுகளுக்கும் பதிலளிக்க வேண்டும்.

**தப்லீஃக் செய்யக் கூடிய நம்முடைய ஒவ்வொரு நபரும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, சில நேரங்களில் நாம் ஆட்சேபனை செய்பவர்களின் ஆட்சேபனைகளின்போது, 'இதுவா உங்களின் நற்பண்புகள்!' என்று கூறும் வாய்ப்பை ஆட்சேபனையாளர்களுக்கு வழங்கும் வகையிலான விஷயங்களை நாம் பேசி விடுகின்றோம். நம்முடைய நற்பண்புகளோ மிகவும் உயர்ந்ததாக இருக்க வேண்டும். ஆயினும், உண்மையை நிச்சயமாக எடுத்துக் கூறுங்கள்; எனினும் நற்பண்புகளின் வரம்பிற்குள் இருந்து கொண்டே கூற வேண்டும்; அவர்களைப் போல அந்த மொழியை பயன்படுத்தக் கூடாது.**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

வல்லமை மிக்க இறைவனின் நன்மைகளுக்கு இந்த எளியவன் நன்றி சொல்லி மாளாது. (ஏனெனில்) ஒருபக்கம் 'இந்த நிராகரிப்பு காலத்தில், 'நீ நம்பிக்கையாளர் அல்ல' என்று அனைத்துப் பக்கங்களிலிருந்தும் இக்கால ஆலிம்களின் குரல்கள் வந்து கொண்டிருக்கின்றன. (ஆனால்) 'நான் அவனால் அனுப்பப்பட்டுள்ளேன் என்று நீர் கூறுவீராக என்று கம்பீரமும், மேன்மையும் மிக்க அல்லாஹ்விடமிருந்து குரல் வருகிறது.

ஒருபுறம், எப்படியாவது இந்த நபரின் வேரை அறுத்து விடுங்கள் என்று மௌலவிமார்கள் கூறிக் கொண்டிருக்கின்றனர். மறுபுறம், உம் மீது துன்பங்கள் வந்து இறங்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கெட்ட காலம் அவர்கள் மீதே விழ இருக்கின்றது என்ற என்ற இல்ஹாம் வருகின்றது. இறுதியில், இந்த முடிவே வெளிப்பட உள்ளது. இன்ஷா அல்லாஹ்.

ஒருபுறம்,இந்த நபரை மிகவும் இழிவுப்படுத்த வேண்டும்; அவமானப்படுத்த வேண்டும் என்று அவர்கள் முயற்சி செய்கின்றார்கள். ஆனால், மற்றொரு புறம் எவர் உம்மை இழிவுப்படுத்த விரும்புகிறாரோ அவரை நான் இழிவுப்படுத்துவேன். அல்லாஹ் உமக்கான நற்கூலி ஆவான். மேலும், அல்லாஹ் உமக்கு மேன்மையை வழங்குவான் என்று இறைவன் வாக்குறுதி அளிக்கிறான்.

ஒருபுறம், இந்த நபரின் கொள்கையை ஏற்றுக் கொள்வதாலும், பின்பற்றுவதாலும் ஒரு நபர் காஃபிராகி விடுகிறார் என்று மௌலவிமார்கள் ஃபத்வாக்களை எழுதி வருகிறார்கள்.மறுபுறம், நீர் கூறுவீராக! நீங்கள் அல்லாவை நேசிக்கின்றீர்கள் என்றால், என்னைப் பின்பற்றுங்கள்; மேலும் அல்லாஹ் உங்களை நேசிப்பான் என்று அல்லாஹ் தனது இல்ஹாம் மூலம் தொடர்ந்து வலியுறுத்துகிறான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமும் அல்லாஹ் இதனைக் கூறியிருந்தான். மேலும், அன்னாரைப் பின்பற்றியதால் அன்னாருடைய உண்மைப்



பேரன்பரிடமும் அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான். ஏனெனில் அன்னாரே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பர் ஆவார்கள். மேலும், அன்னாரை ஒப்புக் கொள்வது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழுமையாகக் கீழ்ப்படிதலாகும்; ஏனெனில், அன்னார் (அலை) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டவரும், அடிமையும் ஆவார்கள்.

'சுருக்கமாக, இந்த மௌலவிமார்கள் அனைவரும் அல்லாஹ்வுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர். வெற்றி யாருக்கு கிடைக்கிறது? என்று இனி பாருங்கள்!

(நிஷானே ஆஸ்மானி, ரூஹானி கஸாயீன் தொகுதி 4, பக்கம் 422-423)

அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் முன்னேற்றங்கள் இருக்கின்றன. மெல்ல மெல்ல ஜமாஅத் வளர்ந்து கொண்டிருக்கின்றது. இவை அந்த மக்களுக்குப் பார்க்கும் கண்ணும், வெட்கமும் இருந்தால் அவர்களுக்குப் போதுமான பதிலாகும்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

'இந்த இடத்தில் நான் நன்றி செலுத்தாமல் இருக்க முடியாது. அதாவது, அல்லாஹ், நமது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஆதரவாக தனது வஹீ மூலம் காஃபிர்களை குற்றவாளிகளாக குறிப்பிட்டான்; மேலும் கூறினான்: 'எனது இந்த நபி எத்தகைய உயர்தரமான நற்பண்புகளைக் கொண்டவராக இருக்கின்றார் என்றால், அவரது கடந்த நாற்பது வருட வாழ்க்கையில் எந்தவொரு குறையையோ, தவறையோ சுட்டிக்காட்ட உங்களுக்கு ஆற்றல் இல்லை ; அவரோ நாற்பது வருடங்கள் வரை இரவும், பகலும் உங்கள் மத்தியிலேயே இருந்துள்ளார். ஆனால், கண்ணியமும், தூய்மையும், தலைமைத்துவமும், ஆளுமையும் நிறைந்த அவருடைய உயர்வான குடும்பத்தில் ஒரு சிறு குறையைக் கூட உங்களுக்கு கண்டுபிடிக்க ஆற்றல் இல்லை.

அப்படியிருக்க, நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்! இந்த நபர் இப்படிப்பட்ட உயர்ந்த, தூய்மையான மற்றும் மேன்மையான குடும்பத்தைச் சார்ந்தவராக இருக்கின்றார்; மேலும், அவரது நாற்பது ஆண்டு கால வாழ்க்கையில் இட்டுக்கட்டு மற்றும் ஏமாற்று போன்ற பணியை அவர் செய்ததில்லை என்பதற்கு உங்கள் கண்முன்னே கழிந்த அவரது நாற்பது வருட வாழ்க்கை சாட்சி பகிர்கின்றது. மேலும், இந்த சிறப்புகளுடன் அவர் விண்ணின் அடையாளங்களையும் காட்டுகின்றார். மேலும், இறைவனின் உதவிகள் அவருக்கு ஆதரவாக இருந்து வருகின்றன. மேலும், அவர் கொண்டு வந்துள்ள அந்த போதனைக்கு எதிரில், உங்களது கொள்கைகள் முற்றிலுமாக அசுத்தமானதாகவும், தூய்மையற்றதாகவும், இணைவைத்தலால் நிறைந்ததாகவும் இருக்கின்றன. அவ்வாறிருக்கும்போது, இதன் பிறகு இந்த நபி உண்மையானவர் என்பதை ஏற்றுக் கொள்வதில் உங்களுக்கு என்ன சந்தேகம் எஞ்சியிருக்க முடியும்?'

ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் புறமிருந்து தோன்றிய உண்மையான நபி ஆவார்கள்; மேலும் அன்னார் (ஸல்) உலகத்தை அல்லாஹ்வோடு இணைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள் என்று இஸ்லாத்தின் எதிரிகளுக்கு பதிலளிக்கும் விஷயங்களை அன்னார் (அலை) கூறுகின்றார்கள்.

அடுத்து, தம்மைப் பற்றி அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நானும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் ஆவேன் என்று கூறி அதே போன்று அல்லாஹ் என்னுடைய எதிரிகளையும் பொய்யர்களையும் குற்றவாளிகளாக்கியுள்ளான்'. அல்லாஹ்வின் வாக்குறுதி என்னுடனும் இதுவாகவே உள்ளது.

ஆக, 'பராஹீனே அஹ்மதிய்யா' புத்தகத்தின் சான்றைக் குறிப்பிட்டு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

'அதில் என்னைக் குறித்து இந்த இல்ஹாம் உள்ளது. அது வெளியிடப்பட்டு நாற்பது ஆண்டுகள் கழிந்துவிட்டன. அது கீழக் கண்டவாறு ஆகும்:

பொருள்: அந்த எதிரிகளிடம் கூறுவீராக! 'நான் உங்களுக்கு மத்தியில் நாற்பது ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறேன்; இட்டுக்கட்டும், ஏமாற்றுதலும் எனது பணி அல்ல என்பதை இவ்வளவு நீண்ட காலமாக என்னில் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். மேலும், இறைவன் என்னை அசுத்தமான வாழ்க்கையிலிருந்து பாதுகாத்து வைத்திருக்கிறான். அவ்வாறிருக்க, எந்த நபர் இவ்வளவு நீண்ட காலம் அதாவது நாற்பது ஆண்டுகள் வரை எல்லா வித இட்டுக்கட்டு, தீங்கு, சதி மற்றும் அசுத்தத்திலிருந்து பாதுகாப்பாக இருந்தாரோ, மேலும் எவர் மனிதர்களிடம் ஒருபோதும் பொய்யுரைத்ததில்லையோ, அவர் தனது பழைய பழக்கத்திற்கு எதிராக இனி இறைவன் மீது இட்டுக்கட்டுவார் என்பது எப்படிச் சாத்தியமாகும்?''.

(தூர்யாகுல் குலூப், ரூஹானி கஸாயீன் தொகுதி 15, பக்கம் 282-283)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் ஏராளமான அம்சங்களை எடுத்துரைத்து விட்டேன். அன்னார் (ஸல்) ஒருபோதும் பொய்யுரைத்ததில்லை என்று எதிரிகள் கூட அன்னாரைப் புகழ்ந்து வந்தார்கள் என்பதெல்லாம் அதில் தெளிவாக வந்து விட்டது. எனவே, இவை அல்லாஹ்வின் அருள்களுக்கு நன்றி செலுத்தும் விஷயங்கள் ஆகும். இதில் அன்னார் (ஸல்) அல்லாஹ்வின் அருட்களுக்கு நன்றி செலுத்தியுள்ளார்கள். மேலும் தமது உதவியாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் உணர்வுகளையும் அன்னார் (ஸல்) வெளிப்படுத்தியுள்ளார்கள்.

அடுத்து இந்த விஷயங்கள் மட்டுமின்றி, அன்னார் (அலை) பிள்ளைகளிடத்தில் நன்றியுணர்வின் முக்கியத்துவத்தை உருவாக்க எவ்வாறு முயற்சி செய்து வந்தார்கள்? மேலும், வீட்டிலும் அன்னாரின் வழிமுறை எவ்வாறு இருந்தது? இது தொடர்பாக ஓர் அறிவிப்பு வருகிறது.

ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வீட்டில் பிள்ளைகளுக்கு கதை ஒன்றை கூறினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அதனை அல்ஹக்கம் பத்திரிகைக்காக எழுதியிருந்தார்கள். அந்தக் கதை என்னவென்றால், 'ஒரு வழுக்கைத் தலை மனிதரும், ஒரு குருடரும் இருந்தனர். இறைவனின் வானவர் மனித உருவில் அந்த வழுக்கைத் தலை மனிதரிடம் சென்று, 'உனக்கு என்ன வேண்டும்?' என்று கேட்டார். அதற்கு அந்த வழுக்கைத் தலை மனிதர், 'எனக்கு தலைமுடி வேண்டும்; மேலும் பொருளும், செல்வமும் கிடைத்து விட வேண்டும்' என்று கூறினார். எனவே அந்த வானவர், வழுக்கைத் தலை மனிதரின் தலையில் கையைத் தடவினார். அப்போது இறைவனின் வல்லமையால் அவரது தலையிலும் முடி வந்து விட்டது. மேலும் பொருளும், செல்வமும், வேலைக்காரர்களும் கிடைத்து விட்டனர். பின்னர் வானவர் பார்வையற்ற அந்த நபரிடம் சென்றார். மேலும், உனக்கு என்ன வேண்டும்? என்று அவரிடம் கேட்டார். எனது கண்பார்வை கிடைத்து விட வேண்டும்; மேலும் நான் தட்டுத்தடுமாறி திரியக் கூடாது; மேலும், எவரையும் சார்ந்திருக்காமல் இருப்பதற்கு எனக்கு செல்வமும் கிடைத்து விட வேண்டும் என்று அவர் கூறினார். அவரது கண்களில் வானவர் கைகளைத் தடவினார். அப்போது அவருக்கு கண்பார்வை வந்து விட்டது. மேலும், செல்வமும் கிடைத்து விட்டது. பின்னர் அதே வானவர், இறைவனின் கட்டளைக்கிணங்க கண்பார்வையற்றவர் மற்றும் வழுக்கைத் தலை மனிதர் ஆகியோரை சோதிப்பதற்காக ஒரு பிச்சைக்காரரின் தோற்றத்தில் சென்றார். மேலும் வழுக்கைத் தலை நபரிடம் சென்று யாசித்தார். அப்போது, அந்த வழுக்கைத் தலை நபர் எரிச்சலுடன் பதிலளித்தார். மேலும் கோபமடைந்தார். மேலும் கடிந்து கொண்டார். மேலும், செல் ; உன்னைப் போன்ற ஏராளமான பிச்சைக்காரர்கள் இருக்கின்றனர் என்று கூறினார்.

அப்போது, வானவர் அவரது தலை மீது கைகளைத் தடவினார். பின்னர் அவரது தலை மீண்டும் முற்றிலும் வழுக்கையாகி விட்டது. மேலும் அனைத்து செல்வங்களும், பணமும் பறிபோய் விட்டது. பின்னர் மீண்டும் அப்படியே அவர் ஏழ்மை நிலைக்கு சென்று விட்டார். பின்னர் அதே வானவர், பிச்சைக்காரரின் தோற்றத்தில், தற்போது செல்வந்தராகவும், கண்பார்வை பெற்றவராகவும் ஆகியிருந்த அந்த பார்வையற்றவராக இருந்த நபரிடம் சென்றார். மேலும், யாசித்தார். அப்போது, எல்லாவற்றையும் அல்லாஹ்வே வழங்கியுள்ளான்; மேலும், இது அவனது செல்வமாகும் ; நீ எடுத்துக் கொள்! என்று அவர் கூறினார். அப்போது, அந்த பார்வையற்றவராக இருந்தவருக்கு அல்லாஹ் மேலும் செல்வத்தை வழங்கினான்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

எனவே அன்பர்களே! நீங்களும் நினைவிற் கொள்ளுங்கள்! இறைவனால் வழங்கப்பட்டுள்ள அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துங்கள். மேலும் அதற்கு மதிப்பளியுங்கள். மேலும் யாசிப்பவரிடம் கடிந்து கொள்ளாதீர்கள். தருமம் செய்வதும் நல்ல விஷயமாகும். மேலும் யாசிப்பவருக்கு கொடுக்க வேண்டும். அதனால் இறைவன் மகிழ்ச்சியடைகின்றான். மேலும், அருட்கொடையை அதிகரிக்கின்றான்.

(அல்ஹகம், செப்டம் 13, 1898, தொகுதி 2, எண்: 26 - 27, பக்கம் 11)

ஒருவகையில் இது நீளமான ஹதீஸூம் ஆகும். அதில் மூன்று வகையான மக்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஸஹீஹ் புஹாரி, கிதாப் அஹாதீஸூல் அன்பியா, பாப் அப்ரஸ் வ அஃமா வ அக்ரஃ ஃபீ பனீ இஸ்ராயீல், ஹதீஸ் 3464)

ஆனால், அன்னார் (அலை) குழந்தைகளுக்காக அதனை சுருக்கமாக கதையின் வடிவில் வீட்டில் எடுத்துரைத்தார்கள்.

குளிர்காலத்தில் ரமலான் வந்ததற்காக ஒரு நுட்பமான கோணத்தில் நன்றியுணர்வை அன்னார் (அலை) வெளிப்படுத்தினார்கள்.

எனவே ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

மவ்லவி ஷேர் அலீ ஸாஹிப் அவர்கள் என்னிடம் இவ்வாறு எடுத்துரைத்தார்கள். ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறிவந்தார்கள்:

இதுவும் அல்லாஹ்வின் ஓர் அருளாகும். அவன் நம்மை எப்படிப்பட்ட காலத்தில் தோன்றச் செய்தான் என்றால், ரமலான் மாதம் குளிர்காலத்தில் வந்துள்ளது. மேலும் நோன்புகள் அதிக பௌதீக துன்பங்களுக்கு காரணியாக

இருப்பதில்லை. நாம் எளிதாக ரமலானிலும் பணி செய்ய முடியும்.

மவ்லவி ஸாஹிப் கூறினார்கள்: அந்த நாட்களில் ரமலான் டிசம்பர் மாதம் வந்தது. மேலும், அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

'இந்த எளியவன் தெரிவிப்பது என்னவென்றால், நான் அந்த காலத்தின் நாட்காட்டியைப் பார்த்துள்ளேன். 'இது எனது கருத்தாகும்.

அதாவது ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் கருத்தாகும். அன்னார் (ரலி) கூறுகிறார்கள்:

நான் அந்த காலத்தின் நாட்காட்டியைப் பார்த்திருக்கிறேன்: 'ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் 1891-ஆம் ஆண்டில் தாம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற வாதத்தை செய்தார்கள். மேலும் 1891-ம் ஆண்டில் ரமலான் மாதம் ஏப்ரல் 11 அன்று தொடங்கியது. ஆக, ரமலான் மாதம் குளிர்காலத்தில் நுழைவதற்கான தொடக்கமாக இருந்தது. ஆக, 1892-ம் ஆண்டில் ரமலான் மாதம் மார்ச் 31 அன்று தொடங்கியது. 1893-ல் மார்ச் 20 அன்று தொடங்கியது. இதற்குப் பிறகு ரமலான் மாதம் ஒவ்வோர் ஆண்டும் அதிக குளிர்காலம் உள்ள நாட்களில் வந்து கொண்டிருந்தது. மேலும் 1908-இல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மரணமடைந்த போது, அந்த ஆண்டின் ரமலான் மாதம் அக்டோபர் 1 அன்று துவங்கியது. இந்த வகையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வருகைக்குப் பிந்தைய காலம் முழுவதும் எத்தகைய நிலையில் கழிந்தது என்றால், ரமலான் நோன்புகள் குளிர்காலத்தில் மட்டுமே வந்து கொண்டிருந்தன. இது பொதுவான இறைநியதியின் கீழ் அமைந்திருந்த அல்லாஹ்வின் ஒரு பெரும் அருளாகும். மேலும், இதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது நுண்ணறிவு மிக்க இயல்பால் அல்லாஹ்வின் ஓர் அருளாக உணர்ந்து, தம்மிடம் நன்றி செலுத்தும் உணர்வுகளை உருவாக்கினார்கள்.'

(ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 1, பகுதி 2, அறிவிப்பு எண்: 419, பக்கம்: 372 - 373)

ஒரு நபரின் பணியால் மனிதகுலத்திற்கு நன்மைகள் கிடைக்கின்றது என்றால், அந்த விஷயத்திற்காகவும் ஹஸ்ரத் மஸீஹ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நன்றி செலுத்தி வந்தார்கள்.

ஆக, மனிதகுலத்துடன் தொடர்புடைய நன்மைகளைக் குறிப்பிட்டவாறு, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மருத்துவ சிகிச்சையின் அடிப்படையில் ஹஸ்ரத் ஹக்கீம் மவ்லவி நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களைப் பற்றி எடுத்துரைக்கின்றார்கள்:

'இந்த மருத்துவ சிகிச்சை மிகவும் நன்மை பயக்கும் விஷயமாக்கும்'

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இதை மிகவும் மரியாதையுடன் பார்த்தார்கள். ஒருமுறை வீட்டில் மவ்லவி சாஹிப் பற்றிப் பேச்சு வந்தபோது, அன்னார் (அலை), 'அல்ஹம்துலில்லாஹ்! அல்ஹம்துலில்லாஹ்! என்று நீண்ட நேரம் கூறிக் கொண்டே இருந்தார்கள். மேலும் கூறினார்கள்:

'மவ்லவி சாஹிப்' அதாவது ஹஸ்ரத் ஹக்கீம் மவ்லவி நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களும் அல்லாஹ் தஆலாவின் அருட்கொடைகளில் ஓர் அருட்கொடை ஆவார்கள்.

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

அன்னார் (ரலி) மூலமாகப் பல ஏழை, எளிய மக்களுக்குச் சிகிச்சை கிடைத்து விடுகிறது.

சிகிச்சையோ மற்றவர்களுக்கு அளிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால், அன்னார் (அலை) அதற்கு நன்றி செலுத்திக் கொண்டிருந்தார்கள். ஏனெனில் அன்னார் (ரலி) மனிதகுலத்திற்குச் சேவை செய்து கொண்டிருந்தார்கள். மேலும் அன்னார் (ரலி) மூலமாக மனிதர்களுக்கு நன்மை கிடைத்துக் கொண்டிருக்கிறது என்று அன்னார் (அலை) இறைவனுக்கு நன்றி செலுத்தி வந்தார்கள். (ஜல்ஸா ஸாலானா பேருரை, 27 டிசம்பர் 1922, அன்வாருல் உலூம், தொகுதி 7, பக்கம் 35)

மனிதர்களின் வேதனைகளைப் போக்கியவர்களுக்கும் அன்னார் (அலை) நன்றி செலுத்தி வந்தார்கள். அன்னார் (அலை) மனிதகுலத்தின் மீது கொண்டிருந்த வேதனை இத்தகையதாக இருந்தது. அல்லாஹ் மக்களின் வேதனைகளை நீக்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளான் என்று அல்லாஹ்விற்கும் அன்னார் (அலை) நன்றி செலுத்தி வந்தார்கள்.

இன்ஷா அல்லாஹ்! இன்னும் எஞ்சிய விஷயங்களை எதிர்வரும் நாட்களில் எடுத்துரைப்பேன். தற்போது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைக்க விரும்புகிறேன். மேலும் தொழுகைக்குப் பிறகு அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைப்பேன். அதில் முதலாவது நற்குறிப்பு, ஜமாஅத்தின் முபல்லிஃக் ஹாஃபிழ் ஷஹ்பாஸ் அஹ்மது ஸாஹிப் அவருடையதாகும். அவர் ஐவரி கோஸ்ட்டில் இருந்தார். ஜூலை 18 அன்று இதயத் துடிப்பு நின்று போனதன் காரணமாக 31 வயதில் மரணமடைந்து விட்டார். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவராக இருந்தார். அவர் தமக்குப் பின்னால் விட்டுச் சென்றவர்களில், மனைவியும் ஒரு மகளும் அடங்குவர். 2008-இல் திருக்குர்ஆனை மனனம் செய்தார். 2019-இல் ஜாமிஆவிலிருந்து பட்டம் பெற்ற பிறகு, நுமல் (NUML) பல்கலைக்கழகத்தில் பிரெஞ்சு மொழியில் ஓராண்டு டிப்ளமோ பெற்றார். அதற்குப் பிறகு பிரெஞ்சு மொழியில் எம்.ஏ. பட்டமும் பெற்றார். அவரது பணி நியமனம் ஐவரி கோஸ்ட்டில் நிகழ்ந்தது. மர்ஹூம் மிகவும் பழகக்கூடியவராகவும், விருந்தோம்பல் செய்பவராகவும், இனிமையான இயல்பிற்கு சொந்தக்காரராகவும், கிலாஃபத்தின் பற்று கொண்டவராகவும், வக்ஃபின் பொறுப்புகளை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றக் கூடிய ஜமாஅத்தின் ஒரு தூய சேவகராக இருந்தார்.கடந்த சில காலமாக உருது மற்றும் பாரசீக மொழிகளில் திருக்குர்ஆன் திலாவத் சட்டங்களை ஆன்லைனில் கற்பித்து வந்தார்.

எழுதுகின்றவர்கள் எழுதுகின்றனர்: மர்ஹூமின் மிகவும் குறிப்பிடத்தக்க பண்பு, அவரது சுயமரியாதையும், பொறுமையும் ஆகும். அவர் ஒருபோதும் யாருக்கும் சுமையாக இருந்ததில்லை. தப்லீஃகில் அவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. சில சமயங்களில் தனது வீட்டிலேயே தப்லீக் அமர்வுகளை நடத்துவார். நகரத்தின் கண்ணியத்திற்குரிய பிரமுகர்கள் மற்றும் நிர்வாகத்துடன் மிகவும் நல்ல தொடர்புகளைக் கொண்டிருந்தார். தனது ஜமாஅத் மக்களின் தர்பியத்திற்காக பல்வேறு வழிமுறைகளைத் தேடிக் கொண்டே இருந்தார். ஒருபோதும் தனக்கும், ஆஃப்ரிக்க மக்களுக்கும் இடையே இடைவெளி உருவாக அவர் அனுமதிக்கவில்லை. தனது மண்டலத்தில் மிகுந்த கவனத்துடனும், உழைப்புடனும் ஜமாஅத்தின் கட்டுமானப் பணிகளைச் செய்தார். நல்ல வேலைகளைச் செய்தார்; குறைந்த செலவில் மஸ்ஜித்களைக் கட்டினார்.

அவரது மனைவி ஸபீகா ஸாஹிபா கூறுகிறார்: 'அவர் ஒரு நல்ல, நற்பண்புள்ள, மிகுந்த பொறுப்புள்ள முபல்லிஃக் ஆகவும், கணவராகவும், தந்தையாகவும் இருந்தார். '

ஜமாஅத்திற்காக ஏதேனும் ஒரு பெரும் பணியைச் செய்வதற்கு அல்லாஹ் எனக்கு நற்பேறு வழங்க வேண்டும் என்று எனக்காக துஆ செய்! என்ற விஷயம் அவர் எப்போதும் என்னிடம் கூறி வந்த விஷயமாக இருந்தது. நான் ஜமாஅத்திற்காக சிலவற்றை செய்ய விரும்புகிறேன்' என்ற பெரிய துடிப்பு அவரிடம் இருந்தது'.

ஜமாஅத் செல்வங்களை மிகவும் மதித்து வந்தார்கள். சகிப்புத்தன்மை அவரிடம் மிக அதிகமாக நிறைந்திருந்தது. ஏதேனும் ஒரு கவலையோ, துயரமோ ஏற்பட்டால், அதை ஒருபோதும் முகத்தில் வெளிப்படுத்த விடமாட்டார்கள். கோபத்தின் அடையாளமே இருக்காது. எப்போதும் சிரித்த முகத்துடனே இருப்பார்கள். மென்மையாக உரையாடி வந்தார்கள்; அன்புடன் தனது கூற்றை புரிய வைத்து வந்தார்கள்.

நுஃமான் கதீர் ஸாஹிப் முபல்லிஃக் ஆவார். அவர் கூறுகின்றார்:

ஹாஃபிஸ் ஸாஹிப் ஒரு நடைமுறைப் புரிதல் கொண்ட ஆளுமைக்கு சொந்தக்காரராக இருந்தார். ஜமாஅத் விவகாரங்களில் எப்போது அவரிடம் ஆலோசனை கேட்டாலும், அவர் தமது மிகச் சிறந்த புத்திக்கூர்மையால் ஆலோசனை வழங்கி வந்தார்; அதனால் வெளிப்படையில் கடினமாகத் தோன்றி வந்த விவகாரமும் எளிதாகத் தீர்ந்து வந்தது. இளமையிலேயே அல்லாஹ் தஆலா அவருக்குப் பெரிய ஆற்றலை வழங்கி இருந்தான்.

முபல்லிஃக் இஹ்திஷாமுல்ஹக் ஸாஹிப் எழுதுகிறார்:

முரப்பிமார்கள் மட்டுமின்றி, உள்ளூர் முஅல்லிம்களுடனும், மேலும் அண்டை வீட்டார்கள் மற்றும் ஜமாஅத் நண்பர்களுடனும் அவருக்கு மிகவும் ஆழமான தொடர்பு இருந்தது; அதனை சந்திப்புகளின் போது பலரும் இதனைக் குறிப்பிட்டுள்ளனர். சிரமங்களில் உள்ள மற்றவர்களுக்கு இரகசியமாக உதவி செய்து வந்தார்கள்.

ராஃபிஃ தபஸ்ஸும் ஸாஹிப் கூறுகிறார்:

மர்ஹூம் ஜமாஅத்தின் ஒவ்வொரு வேலையையும் தனது பொறுப்பாகக் கருதி வந்தார். ஏதேனும் வேலை ஒப்படைக்கப்பட்டால், அதை ஒரு கடமையாக அல்லாமல் இறை வணக்கமாக கருதி நிறைவேற்றி வந்தார். நேரத்தைக் கடைப்பிடித்தல், திட்டமிடல், பொறுப்புணர்ச்சி மற்றும் தூய உள்ளம் ஆகியவை அவரது ஆளுமையின் முக்கிய அம்சங்களாக இருந்தன.

மர்ஹூமின் மற்றொரு சிறப்பு இதுவாகவும் இருந்தது. அதாவது, அவர் எப்போதும் ஜமாஅத்தின் கல்வி மற்றும் தர்பியத்திற்காக புத்தம் புதிய வழிகளைப் பற்றி சிந்தித்துக்கொண்டே இருந்தார். இளைஞர்கள், குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் என அனைவரின் பயிற்சியைப் பற்றியும் அவர் கவலைப்பட்டார். ஒரு முரப்பியிடம் இருக்க வேண்டிய மிக முக்கியமான விஷயம் இதுவே ஆகும்.

அதேபோல மர்ஹூமின் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், அவரிடம் மிகவும் உளத் தூய்மை இருந்தது; சுயநலமின்றிச் சேவை செய்து வந்தார். ஒருபோதும் விளம்பரப்படுத்திக் கொள்ள மாட்டார். புகழை விரும்புபவராக இல்லாமல், அல்லாஹ்வின் திருப்தியை விரும்பி வந்தார். எங்கு பணியமர்த்தினாலும் எப்போதும் மார்க்கப் பணியில் மும்முரமாக இருந்து வந்தார். குழந்தைகளுக்கு திருக்குர்ஆனைச் சரியான

உச்சரிப்புடன் கற்றுக் கொடுத்தார்; மிகுந்த அன்புடன் கற்பித்தார். அவரை நினைவு கூரக் கூடிய ஏராளமான மாணவர்கள் உள்ளனர்.

இரண்டாவது நற்குறிப்பு, யிலிங்கா மூமினி (Yilyinga Moumini) ஸாஹிப். இவர் ஃபுர்கினா ஃபாஸோவைச் சேர்ந்தவர் ஆவார். அங்கு ஓரிடத்தின் அன்ஸாருல்லாஹ் அமைப்பின் ஸயீமாக இருந்தார். இது ஜூலை மாதத்தின் செய்தியாகும். அவர் வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோது, பயங்கரவாதிகள் அவரைத் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காக்கி ஷஹீதாக்கி விட்டனர். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் 1989-ல் பைஅத் செய்திருந்தார்.

முபல்லிஃக் வதூத் சாஹிப் எழுதுகிறார்: ஷஹீது மர்ஹூம், ஜமாஅத் மற்றும் கிலாபஃத் மீது தீவிர அன்பு கொண்ட மிகவும் தூய மனிதராக இருந்தார். அவரிடத்தில் திருக்குர்ஆன் மீது காதல், பள்ளிவாசலுடன் ஆழ்ந்த தொடர்பு, இறை வணக்கம், கிலாஃபத்திற்குக் கீழ்ப்படிதல் மற்றும் ஜமாஅத்திற்கு சேவை செய்கின்ற உணர்வு இருந்தது.

அதேபோன்று, அப்துல்லாஹ் ஜிங்காணி ஸாஹிப் முஅல்லிம் ஆவார். அவர் கூறுகின்றார்:

மிகவும் தைரியமானவர்; பயமற்றவர், தூய மனமுடையவர்; இறையச்சமுடையவர், இறை வணக்கம் செய்யக் கூடியவர். நற்பண்புகள் மிக்கவர்; இனிமையாக பழகக் கூடியவர்; மேலும் குறைவாகப் பேசக் கூடியவராக இருந்தார்; மேலும், அவர் கிலாஃபத்தின் மீது அன்பு கொண்ட மற்றும் கட்டுப்படக் கூடிய மிகச் சிறந்த ஊழியராக இருந்தார். அவர் அடிக்கடி பள்ளிவாசலுக்கு எல்லோரையும் விட முன்னதாகவே வந்து சேர்ந்து, அமர்ந்து திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருப்பார்.

அதேபோன்று, முஅல்லிம் ஸாஹிப் கூறுகின்றார்கள்: ஃபஜ்ர் தொழுகை நேரத்தில் அவருடைய வீட்டின் முன்னால் கடந்து செல்லும்போது, வீட்டிலிருந்து திருக்குர்ஆன் ஓதும் சப்தம் கேட்கும்.

அந்த மண்டலத்தின் தலைவரான அப்துர் ரஹ்மான் ஸாஹிப் கூறுகின்றார்: ஜமாஅத் ரீதியாக எப்போது வகாரே அமல் நிகழ்ச்சி இருந்தாலும், வயதில் பெரியவராக இருந்தபோதிலும், நான் எப்போது கூறினாலும் அவரே நேரில் வருவார்; தனது குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வருவார்; எல்லா ஜல்ஸாவிலும், இஜ்திமாவிலும் நிச்சயம் கலந்து கொள்வார். உடல்நலம் சரியில்லாத நேரத்திலும் கூட ஜமாஅத் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்.

அமீன் பலோச் ஸாஹிப் கூறுகின்றார்: 'நானும் அந்தப் பகுதியில் வசித்து வருகிறேன். அவர் சந்தா கொடுப்பதில் மிகவும் முறையானவராக இருந்தார்.

அதேபோல், மதிப்பிற்குரிய முஅல்லிம் பால்போனே சாஹிப் கூறுகின்றார்:

அவர் ஷஹீதாவதற்கு ஒரு நாள் முன்பு கூடத் தனது சந்தா தொடர்பாக தொடர்பு கொண்டார். அதைச் செலுத்துவது தொடர்பாக கவலையை தெரிவித்தார். மேலும் அவர் ஜமாஅத்திற்குச் சேவை செய்யும் உணர்வால் நிறைந்திருந்தார்.

அவரைப் பற்றி எழுதிய அனைவரும் இந்தச் சிறப்பு அம்சங்களையே எழுதியுள்ளனர். அவரது வாரிசுகளில் இரண்டு மனைவிமார்களும், 13 மகன்களும், மகள்களும் அடங்குவர். அல்லாஹ் தஆலா அவருடன் பாவமன்னிப்புடனும், கருணையுடனும் நடந்து கொள்வானாக!

மூன்றாவது நற்குறிப்பு மதிப்பிற்குரிய யஹ்யா சுமாரே (Soumare) ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர் மாலியைச் சேர்ந்தவர் ஆவார். இவரும் கடந்த நாட்களில் 32 வயதில் மரணமடைந்து விட்டார். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவரும் ஷஹீது ஆவார். மாலியில் பயங்கரவாதம் காரணமாகச் சில காலமாகச் சூழல் மோசமாக உள்ளது. யஹ்யா சுமாரே சாஹிப் காவ் பிராந்தியத்தின் அனெஃபிஸ் (Anefis) பகுதியில் இராணுவப் பணியில் ஈடுபட்டிருந்தார். இவர் ராணுவத்தில் இருந்தார். கூறுகின்றார்கள்: ஜூலை 4 அன்று வானிலை மிகவும் மோசமாக இருந்தது, பலத்த காற்று வீசிக் கொண்டிருந்தது. நான் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த பிற ராணுவக் குழுவினரின் நலனை அறிந்து வருகிறேன் என்று அவர் அந்த சந்தர்ப்பத்தில் தனது உயர் அதிகாரியிடம் கூறினார். மேலும், பயங்கரவாதிகளுக்கு எதிராக ரோந்து பணியில் நியமிக்கப்பட்டிருந்தவர்களைப் பார்ப்பதற்கு அவர் வெளியே சென்றபோது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி விட்டனர். அந்தத் தாக்குதலின் போது யஹ்யா ஸாஹிப் ஷஹீதாகி விட்டார். அவரைப் பற்றி மேலும் எழுதப்பட்டுள்ளது: மாலியின் சுதந்திர தினமான செப்டம்பர் 22 அன்று இராணுவத்தில் அவருக்கு பதவி உயர்வு வழங்கப்படவிருந்தது. மேலும், அவருக்கு 'மெடல் ஆஃப் ஹானர்' (Medal of Honor) என்ற விருதும் வழங்கப்படவிருந்தது. ராணுவத் தரப்பிலிருந்து இந்த முடிவு எடுக்கப்பட்டிருந்தது. அதேபோல், ஒரு பெரிய நகரத்தில் அவரது பணி நியமனம் நிகழ இருந்தது. ஆனால் அதற்கு முன்பே அவர் ஷஹாதத் எனும் பானத்தைப் பருகிவிட்டார்.

அவரது சகோதரர் ஃபூடே சுமாரே (Fodé Soumaré) கூறுகின்றார்: யஹ்யா சுமாரே 2022 ஆம் ஆண்டு ஜல்ஸா ஸாலானாவில் கலந்து கொண்டார். ஜல்ஸாவின்போது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நிழற்படத்தைக் கண்டதும் அவரது இதயத்தில் ஒரு சிறப்பு நிலை உண்டானது. மேலும் அவர் ஒரு விநோதமான அமைதியையும், மனநிறைவையும் உணர்ந்தார். ஜல்ஸாவின் போது உரைகளைக் கேட்டார்; மேலும், குறிப்பாக உள்ளூர் மொழியில் 'இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம்' எனும் ஜமாஅத் நூலைப் படித்ததன் மூலமாகவும் அவரது நம்பிக்கை மேலும் அதிகரித்தது. குறிப்பாக ஜிஹாத் தொடர்பான அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பகுத்தறிவு மற்றும் இஸ்லாத்தின் போதனைகளின் அடிப்படையிலான நிலைப்பாடு அவரது இதயத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த அருளுக்குரிய ஜல்ஸா ஸாலானாவின் போதே அவர் 'பைஅத்' செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டார்.

அவரது மனைவி கூறுகின்றார்: அவர் ஒரு முன்னுதாரணமான கணவராகவும், தனது குழந்தைக்கு மிகவும் பரிவு மிக்க தந்தையாகவும், எங்கள் தேவைகளைக் கருத்தில் கொள்பவராகவும் இருந்தார். கடினமான காலங்களில் அவர் எங்களுக்குப் பலமான ஆதரவாக இருந்தார்.

அவரது பெற்றோர் கூறுகின்றனர்: 'அவர் எங்களிடம் மிகுந்த அன்பும், மரியாதையும் கொண்டிருந்தார். அவர் வழக்கமாக தொலைபேசியில் அழைத்து எங்களை நலம் விசாரிப்பார். எங்கள் தேவைகளைக் கவனித்துக் கொண்டு, எங்கள் ஒவ்வொரு துன்பத்தையும் போக்க முயல்வார். மிகவும் கீழ்ப்படிதலுள்ள மகனாக இருந்தார்'.

மிஷனரி இன்சார்ஜ் மாலி சாஹிப் எழுதுகின்றார்கள்: அவர் புன்னகை பூத்த முகமும், மகிழ்ச்சியான குணமும் கொண்ட ஓர் இளைஞராக இருந்தார். நோன்பு மற்றும் தொழுகையை முறையாகப் பின்பற்றுபவராகவும், தேவையுடையவர்களைக் கருத்தில் கொள்பவராகவும், நம்மவர்கள் மற்றும் மற்றவர்கள் இருவருக்கும் ஒரு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்பவராகவும், குடும்ப உறவுகளைச் சிறப்பாகப் பேணக் கூடியவராகவும், நல்ல மற்றும் உண்மையுள்ள மனிதராகவும் இருந்தார்.

புதிதாக அஹ்மதிய்யா கொள்கையை ஏற்றவராக இருந்தபோதிலும், மர்ஹூமிற்கு அஹ்மதிய்யா ஜமாஅத், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் கண்ணிய மிக்க கலீஃபாக்களுடன் அர்ப்பணிப்பும், ஆழமான தொடர்பும், பற்றும், உண்மையான அன்பும் இருந்தது. அவருடைய தந்தை அஹ்மதியாக இருக்கவில்லை. ஆனால், தன் மகனின் ஷஹாதத்திற்குப் பிறகு ஜமாஅத்தின் அழகிய நடத்தையையும், மேலும் ஜமாஅத் எவ்வாறு எல்லாவற்றையும் நிர்வகித்தது? என்பதையும், அவர் கண்டார்; இந்த அனுதாபத்தைக் கண்டு அவர் தாக்கத்திற்குள்ளானார். மேலும் அவர் ஏற்கனவே மார்க்கத்தைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தார். 'அஹ்மதிய்யா இயக்கத்தின் உண்மைத்தன்மை இப்போது எனக்குத் தெளிவாக வெளிப்பட்டுவிட்டது' என்று அவர் கூறுகின்றார். எனவே அவர் பைஅத் செய்ய தீர்மானித்துள்ளார்.

இதேபோன்று, அடுத்த நற்குறிப்பு கண்ணியத்திற்குரிய ஸிராஜுல் ஹக் குறைஷி ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர் ரப்வாவின் ஜல்ஸா ஸாலானவின் துணை அதிகாரியாக இருந்தார். இவர் கடந்த நாட்களில் 86 வயதில் காலமானார். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளால் இவர் வஸிய்யத் செய்தவராக இருந்தார். இவரது தந்தை வழிப்பாட்டனாரும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபியுமான ஹஸ்ரத் மியான் குத்புத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் மூலம் இவரது குடும்பத்தில் அஹ்மதிய்யத் நுழைந்தது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) வந்துவிட்டார்கள் என்று அன்னாருக்குக் கனவு வந்தது. எனவே அன்னார் (ரலி) காதியான் சென்று, ஹுஸூர் (அலை) அவர்களின் கரங்களில் பைஅத் செய்தார்கள். அன்னாரது தந்தை வழிப்பாட்டியும் ஸஹாபியாவாக இருந்தார்கள். அல்லாஹ் மர்ஹூமின் தந்தை வழிப்பாட்டனாருக்கு குரைஷி ஃபாஸல் ஹக் மற்றும் குரைஷி அப்துல் ஃகனி சாஹிப் என்ற இரு மகன்களை வழங்கினான். இந்த இரு மகன்களும் மார்க்கத்திற்காகப் பெரிதும் சேவை செய்தவராக இருந்தார்கள். வியாபாரம் செய்து வந்தபோதிலும், எந்நேரமும் மார்க்கச் சேவைக்காக தயாராக இருந்தார்கள். ரப்வாவை நல்வாழ்வுப் பகுதியாக உருவாக்குவதிலும் இவர்களுக்குப் பெரும் பங்கு உள்ளது. குறிப்பாக, தண்ணீர் தேடும் பணி தொடங்கியபோதும், குழாய்கள் போன்றவற்றை அமைக்கும் பணி இவரிடமே ஒப்படைக்கப்பட்டது. குரைஷி ஸிராஜுல் ஹக் ஸாஹிபின் தாய்வழி பாட்டனார் மவ்லவி முஹம்மத் உஸ்மான் சாஹிப் அவர்களும் ஒரு ஸஹாபியாக இருந்தார்கள்.

இன்றைய நாட்களில், மர்ஹூம் துணை நாஸிர் மற்றும் துணை ஜல்ஸா ஸாலானா அதிகாரியாகச் சேவை செய்து வந்தார். இவர் முறைப்படியான ஜமாஅத் சேவையைச் சில ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கினார். அதற்கு முன்பாக இவர் கல்வித்துறையில் பல்வேறு கல்லூரிகளில் ஆசிரியராகப் பணியாற்றினார். ரப்வாவில் உள்ள 'டி.ஐ. கல்லூரியிலும்' (T.I. College) இவர் கற்பித்துள்ளார்.

ஸய்யது காஸிம் அஹ்மது ஸாஹிப்

கூறுகின்றார்கள்: ஸிராஜுல் ஹக் குறைஷி ஸாஹிப்பின் மறைவால் ஜல்ஸா ஸாலானா அலுவலகத்தின் அனைத்து ஊழியர்களும், தங்களுக்கு மிகவும் அன்பான, அனுதாபம் கொண்ட ஒரு தோழரும் பெரியவருமான ஒருவரை பிரிந்துவிட்டதாக உணர்கிறார்கள். அன்னாரிடம் எந்த வேலை ஒப்படைக்கப்பட்டாலும், அதை மிகுந்த பொறுப்புணர்வுடன் செய்து முடிப்பார்கள். அவர்களின் வாரிசுகளில் இரண்டு மகள்களும், இரண்டு மகன்களும் அடங்குவர். ஒரு மகன் கமருல்ஹக் குறைஷி சாஹிப் ஆவார். இவர் ஜமாஅத்தின் முரப்பி ஆவார்.மேலும் வரலாற்றுத் துறையில் தொண்டாற்றி வருகிறார். அல்லாஹ் தஆலா அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த நற்குறிப்பு, நைஜீரியாவின் கண்ணியத்திற்குரிய முஅல்லிம் லாவல் தய்யிப் (Lawal Toyeeb) ஸாஹிப் அவர்களுடையதாகும். இவரும் கடந்த நாட்களில் தனது 30வது வயதில் மரணமடைந்து விட்டார். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அல்லாஹ்வின் அருளால் இவர் வஸிய்யத் செய்தவராக இருந்தார். ஜல்ஸா ஸாலானாவின் நேரலை ஒளிபரப்பு தயாரிப்புகளின் போது, பள்ளிவாசலின் சாட்டிலைட் டிஷ் பழுதுபார்க்கும் போது, ஏணியில் இருந்து கீழே விழுந்து பலத்த காயமடைந்தார். சிகிச்சை அளித்தும் பலனின்றி உயிரிழந்தார். அவரது முதுகெலும்பில் பலத்த காயம் ஏற்பட்டது. வாரிசுகளில் பெற்றோர் மற்றும் மனைவி மட்டுமின்றி, சுமார் 11 மாதங்கள் நிரம்பிய ஒரு பெண் குழந்தையும் அடங்கும். 2018-ஆம் ஆண்டில் ஜாமிஅத்துல்-முபஷ்ஷிரீன் நைஜீரியாவில் தனது கல்வியை முடித்து, முஅல்லிமாக நியமிக்கப்பட்டார். மிகவும் பணிவான இயல்பு கொண்டவர்; சுறுசுறுப்பானவர் மற்றும் நேர்மையான முஅல்லிமாக இருந்தார். ஜமாஅத் தரப்பிலிருந்து ஒப்படைக்கப்படும் ஒவ்வொரு பொறுப்பையும் தனது சக்திக்கு ஏற்ப மிகவும் சிறப்பாகவும், உழைப்பு மற்றும் தூய மனதுடனும் சிறந்த முறையில் நிறைவேற்றி வந்தார்.

அவரது பெற்றோர் கூறுகின்றார்கள்: அவர் மிகவும் பொறுப்புள்ளவர்; பெற்றோர் மீது அளவற்ற அக்கறை கொண்டவராக இருந்தார்; மேலும் சேவை மனப்பான்மை கொண்ட மகனாக இருந்தார். குறைந்த நிதி ஆதாரங்கள் இருந்தபோதிலும், அவர் எப்போதும் தனது சக்திக்கு உட்பட்டு பெற்றோரின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயன்று வந்தார்.

அவரது மனைவி கூறுகின்றார்: ஜமாஅத் பொறுப்புகளை நிறைவேற்றுவதுடன், இஸ்லாமிய போதனைகள் மற்றும் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் வழிகாட்டல்களையும் நடைமுறையில் பின்பற்றுபவராக இருந்தார். தனது நற்பண்புகள், நேர்மை மற்றும் அன்பின் காரணமாக ஜமாஅத் உறுப்பினர்கள், பிற முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்கள் என அனைவரிடமும் சமமாக அன்பு பெற்றிருந்தார்.

ஒரு முஅல்லிம் முனவ்வர் ஸாஹிப் ஆவார். அவரும் இதையே கூறுகின்றார்: மர்ஹூம் மிகவும் சிறந்த நற்பண்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார். மேலும், மிகுந்த பொறுமையும், தைரியமும் இருந்தது. மற்றவர்களுக்கு ஊக்கமளித்து வந்தார். மேலும் மாணவர் பருவத்திலிருந்தே ஜமாஅத்திற்கு சேவை செய்வதில் அவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருந்தபோதிலும், கடுமையான உடல்நலக் குறைவுற்ற நிலையிலும் காயமடைந்திருந்தார். மேலும் வேதனையில் இருந்தார். ஆனால், அவர் ஜமாஅத் விவகாரங்களைப் பற்றியும், ஜமாஅத் நபர்களின் தர்பிய்யத் குறித்தும் விசாரித்துக் கொண்டே இருந்தார். அல்லாஹ் தஆலா அவருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக!

அடுத்த ஜனாஸா ஒய்வுபெற்ற மரியாதைக்குரிய மாஸ்டர் கஃபூர் அஹ்மது ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர் இன்றைய நாட்களில் கனடாவில் இருந்தார். சாங்லா ஹில்லின் ஒரு கிராமத்தின் ஸத்ராகவும் இருந்துள்ளார். அவரும் கடந்த நாட்களில் மரணமடைந்துள்ளார். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

ஐவேளை தொழுகையாளியாக இருந்தார்; தஹஜ்ஜுத் தொழுபவராக இருந்தார்; இறையச்சம் கொண்டவராக இருந்தார்; இனிமையாக பழகக் கூடியவர்; மேலும், கிலாஃபத் மீது மிகுந்த பற்று கொண்டவர்; எப்போதும் ஜமாஅத் அமைப்பு மற்றும் கிலாஃபத்திற்கு கீழ்ப்படிந்து நடக்கக் கூடிய ஒரு நபராக இருந்தார். மற்றவர்களின் தேவைகளையும் கருத்தில் கொள்வார். சிலருக்கு இரகசியமாக நிதி உதவி செய்வார். ஜமாஅத் சந்தாக்கள் மற்றும் பிற பொருளாதார திட்டங்களில் ஆர்வத்துடன் பங்கேற்பார். முறையாக குத்பா கேட்டு வந்தார். மற்றவர்களுக்கும் அதை அறிவுறுத்துவார். ஜமாஅத் பணியாளர்கள் மற்றும் வாழ்வை அர்ப்பணித்தவர்களை மிகவும் மதித்து வந்தார். இவரது வாரிசுகளாக மனைவி மட்டுமின்றி, மூன்று மகள்கள் மற்றும் ஐந்து மகன்கள் உள்ளனர். அதேபோல் பேரன்களும் பேத்திகளும் உள்ளனர்.

இவரது ஒரு மகன் நயீம் இக்பால் சாஹிப் ஆவார்; ஃபிஜியின் அமீர் மற்றும் மிஷனரி இன்சார்ஜ் ஆக உள்ளார். தந்தை இறந்த நேரத்தில் செயற்களத்தில் இருந்ததால், அவரால் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அல்லாஹ் தஆலா அவருக்கும் பொறுமையையும், தைரியத்தையும் தந்தருள்வானாக! மேலும் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக!

(தினசரி அல்-ஃபஸ்ல் இன்டர்நேஷனல், 4 செப்டம்பர் 2026, பக்கம் 2 முதல் 7)

தமிழாக்கம்<br>முரப்பி<br>A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *

### தொழுகையில் உருக்கமும், கவனமும் ஏற்பட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கற்றுக் கொடுத்த துஆ

அல்லாஹ்வே! நான் எவ்வளவு குருடனாகவும், பார்வையற்றவனாகவும் இருக்கிறேன் என்பதை நீ பார்க்கின்றாய். நான் தற்போது முற்றிலும் மரணித்த நிலையில் இருக்கிறேன். சிறிது நேரத்திற்குப் பிறகு எனக்கு (அழைப்புக்) குரல் வரும் போது, நான் உன் பக்கம் வந்து விடுவேன் என்பதை நான் அறிவேன். அந்த நேரத்தில் என்னை யாரும் தடுக்க முடியாது. ஆனால் என் இதயம் பார்வையற்றதாகவும், அறிவற்றதாகவும் இருக்கிறது. எனவே உன் அன்பும், ஆர்வமும் அதில் உருவாகும் வண்ணம் ஒளியின் சுடரை அதில் இறக்குவாயாக! நான் பார்வையற்றவர்களுடன் எழும்பாமல் இருக்கும் வகையிலும், குருடர்களுடன் இணைந்து விடாமல் இருக்கும் வகையிலும் அருள் புரிவாயாக!'

(மல்ஃபூஸாத்)

* * * * * * * * * * *

## 2-ம் பக்கத் தொடர்ச்சி (தலையங்கம்)......

செய்கின்றார்கள் என்ற அளவு வரை தனது உள்ளத்தை வெளிப்படுத்த முடியும்; மேலும் மனித ஆற்றல்களுக்கு( இதை விட அதிகமானவற்றுக்கு) திறன் இல்லை.

மேலும் கூறினார்கள்: 'இது என்னுடையது' என்ற உணர்வு ஒரு நோயாகும். எல்லா பொருளும் அல்லாஹ்விற்குரியது என்று நீங்கள் கருதினால், அதுவே இறையச்சமாகும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தொழுகையை அழகுபடுத்தி, அழகுப்படுத்தித் தொழ வேண்டும். ஏனெனில் தொழுகை என்பது அனைத்து முன்னேற்றங்களுக்கான ஆணிவேரும், ஏணியுமாகும். எனவேதான் தொழுகை நம்பிக்கையாளனின் மிஃராஜ் ஆகும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த மார்க்கத்தில் லட்சக்கணக்கான அல்லாஹ்வின் நேசர்களும், உண்மையாளர்களும், அப்தால்களும், குத்புகளும் கடந்து சென்றுள்ளனர். அவர்கள் இந்த படித்தரங்களையும், அந்தஸ்துகளையும் எவ்வாறு அடைந்தார்கள்? இதே தொழுகையின் மூலமே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'எனது கண்களின் குளிர்ச்சி தொழுகையில் உள்ளது' என்று கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

திருக்குர்ஆனைப் புரிந்துகொள்வதற்கும், அதன் வழிகாட்டுதலுக்கு ஏற்ப நேர்வழி பெறுவதற்கும் இறையச்சம் மிகவும் அவசியமானதாகும்.

அடுத்து, அன்னார் (அலை) நமக்கு அறிவுறுத்தியவாறு கூறினார்கள்: ஒரு மனிதன் தனது தீய ஒழுக்கங்களைக் கைவிடாத வரை, அந்த தீய ஒழுக்கங்களுக்கு எதிரில் அந்த உயரிய நல்லொழுக்கங்களை அவனால் ஒப்புக் கொள்ள முடியாது; ஏனெனில் இரு எதிரெதிர் குணங்கள் ஒரே இருதயத்தில் ஒன்றிணைய முடியாது. உண்மையான விஷயம் என்னவென்றால், மனிதன் இறையச்சத்தைப் பெற முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் தஆலா இறையச்சமுடையவர்களை நேசிக்கின்றான் என்று அன்னார் (அலை) தமது ஜமாஅத்திற்கு அறிவுரை வழங்கியவாறு கூறினார்கள்.

இறைவனின் மகத்துவத்தை எண்ணிப் பார்த்து, மிகவும் அஞ்சிக் கொண்டிருங்கள்; அனைவரும் அல்லாஹ்வின் அடியார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எவர் மீதும் அநீதி இழைக்காதீர்கள்; எவரையும் ஏளனமாகப் பார்க்காதீர்கள். ஜமாஅத்தில் ஒரு நபர் அசுத்தமானவராக இருந்தால், அவர் முழு ஜமாஅத்தையும் அசுத்தமாக்கி விடுவார்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நாம் தக்வாவிலும், தூய்மையிலும் எந்தளவுக்கு முன்னேறியிருக்கிறோம் என்பதை எப்போதும் பார்க்க வேண்டும். அதற்கான அளவுகோல் திருக்குர்ஆன் ஆகும். அல்லாஹ் தஆலா இறையச்சமுடையவரை உலகின் வெறுக்கத்தக்க விஷயங்களிலிருந்து விடுவித்து, அவரது பணிகளில் அவனே உதவியாளனாகி விடுகின்றான் என்பதை இறையச்சமுடையவர்களின் அடையாளங்களில் ஓர் அடையாளமாக கூறுகின்றான் .

மேலும் கூறுகின்றார்கள்: எந்த நபர் இறைவனுக்கு அஞ்சுகிறாரோ, அல்லாஹ் தஆலா அவரை ஒவ்வொரு துன்பத்தின்போதும் அவருக்கு வெளியேறும் வழியை உருவாக்கி கொடுக்கின்றான்; மேலும் அவர் கற்பனை செய்து கூட பார்க்காத வழிகளில் அவருடைய வாழ்வாதாரத்திற்கான ஏற்பாட்டை செய்து கொடுக்கின்றான்.

மேலும் அன்னார் (அலை) கூறினார்கள்:

அல்லாஹ் தஆலா பலவீனமானவன் என்று நினைக்காதீர்கள்; அவன் மிகவும் ஆற்றல் படைத்தவன் ஆவான். நீங்கள் ஏதேனும் ஒரு காரியத்தில் அவன் மீது முழு நம்பிக்கை வைத்தால், அவன் நிச்சயமாக உங்களுக்கு உதவுவான். அல்லாஹ் தஆலாவின் மீது யார் நம்பிக்கை வைக்கிறாரோ, அவருக்கு அவனே போதுமானவனாக ஆகிவிடுகிறான்.

மற்றோர் இடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

அனைவரும் முழு கவனத்துடன் கேட்க வேண்டும்; மேலும், முழுமையான சிந்தனையுடனும் கேட்க வேண்டும்; ஏனெனில் இது ஈமானிய காரியமாகும். இதில் சோம்பலும், கவனமின்மையும் மிக மோசமான விளைவுகளை உருவாக்குகின்றன. எந்த மக்கள் ஈமானில் அலட்சியத்துடன் செயல்படுகின்றார்களோ, அவர்களிடம் சில விஷயங்கள் கூறப்பட்டால் அவர்கள் அதனை கவனமாகக் கேட்பதில்லை. எனவே உரையாற்றுபவரின் உரை எவ்வளவுதான் உயர்தரமாக பயனுள்ளதாகவும், தாக்கம் மிக்கதாகவும் இருந்தாலும், அவர்களுக்கு எந்தப் பயனும் ஏற்படாது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

எனவே நாம் அல்லாஹ் தஆலாவின் திருப்தியை பெறுவதற்கும், நமது பைஅத்தை புதுப்பிப்பதற்காகவும் நாம் இங்கு ஆஜராகி, இங்கிருந்து நாம் நன்மை மற்றும் தக்வாவின்படி அமல் செய்பவர்களாக மாறிச் செல்வோம் என்ற உறுதிமொழியை எடுக்கும்போதுதான் இந்த ஜல்ஸாவை நடத்துவது நமக்கு பயனளிக்க முடியும்.

அன்னார் (அலை) கூறினார்கள்:

நமது ஜமாஅத் முற்றிலும் இறையச்சத்தை மேற்கொள்வது அவசியமாகும். மேலும் குறிப்பாக, எவர் இறைவன் புறமிருந்து தோன்றியுள்ளாரோ அவருடன் அவர்கள் தொடர்பு வைத்திருப்பதாலும், மேலும் அவரது பைஅத் அமைப்பில் அவர்கள் இணைந்திருக்கின்றனர் என்ற சிந்தனையின் அடிப்படையிலும் அவர்கள் இறையச்சத்தை பேணுவது அவசியமாகும். எந்த மக்கள் எந்த வகையான பொறாமை, பகை அல்லது இணைவைத்தல் ஆகியவற்றில் மூழ்கியிருந்தார்களோ, அல்லது எவர்களின் நிலை உலகளவில் எவ்வாறாக இருந்தாலும், அவர்கள் இந்த எல்லா வகையான துன்பங்களிலிருந்தும் இரட்சிப்பு பெறுவதற்காக இந்த பைஅத் அமைப்பில் இணைந்துள்ளனர். எனவே அவர்கள் இறையச்சத்தை பேணுவது மிகவும் அவசியமாகும்.

இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

இந்த நாட்களில் இறை தியானத்திலும் அதிகம் அழுத்தம் கொடுங்கள். உங்களுக்காகவும், ஜமாஅத்திற்காகவும், இஸ்லாமிய உலகத்திற்காகவும் அதிகமாக துஆ செய்யுங்கள்.

அல்லாஹ் தஆலா அவர்களுக்குத் தனது அடையாளத்தை வழங்குவானாக. மேலும், நமக்கும் தப்லீஃக்கின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கும், இறையச்சத்தின் வழியில் நடந்து அவர்களுக்கு தூதுச் செய்தியைச் சென்றடையச் செய்வதற்கும் நற்பேறு வழங்குவானாக!

தமிழாக்கம்
முரப்பி

A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *  * * * * * *

سیرت خاتم النبیین ﷺ

## ஸீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்கள்

**நூலாசிரியர்**

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம். ஏ (ரலி)**

## அரேபியாவும் அதன் மக்களும்

### பெண்களின் நிலை

அரேபியாவில் பெண்களின் ஒட்டுமொத்த நிலைமை நன்றாக இருக்கவில்லை. நிச்சயமாக பொதுவாக பெண்களுக்கு தங்களின் கணவரைத் தாங்களே தேர்ந்தெடுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்தத் தேர்வுக்குப் பிறகு அவர்கள் செயல் ரீதியாக அதிகாரமற்றவர்களாக இருந்தனர். இருப்பினும், புத்திசாலிப் பெண்கள் தங்கள் கணவர்கள் மீது நல்ல செல்வாக்கைக் கொண்டிருந்தனர். போரில் பெண்கள் எவ்வாறு நடத்தப்பட்டார்கள் என்பது குறித்து ஏற்கெனவே விவரிக்கப்பட்டு விட்டது. ஆண்களுக்கு தன்மானம் ஊட்டுவதும், காயமடைந்தவர்களைப் பராமரிப்பதும் அவர்களின் பணியாக இருந்தது. பெண்கள் கவிதையும் இயற்றி வந்தனர். அறியாமைக் காலத்தின் புகழ்பெற்ற கவிஞரான ஃகன்ஸா என்பவர் இருந்தார். அவர் பின்னாட்களில் முஸ்லிமாக ஆகிவிட்டார். பெண்களிடம் பர்தா முறையும் இருக்கவில்லை. மாறாக, அவர்கள் பர்தா இன்றி வலம் வந்தனர். திருமணங்களின் எண்ணிக்கைக்கு எவ்வித வரம்பும் இருக்கவில்லை; ஒரு நபர் எத்தனை மனைவிகளை வைத்துக் கொள்ள விரும்பினாலும் வைத்துக் கொள்ளலாம் என்ற நிலை இருந்தது. சில சமயங்களில், தந்தை மணம் முடித்த பெண்ணை மகன் வாரிசுச் சொத்தாக கருதி கைபற்றி விடுவார்; உடன் பிறந்த இரு சகோதரிகளையும் ஒரே நேரத்தில் மணம் முடித்துக் கொள்வதும் நடந்து வந்தது. ஆனால், இத்தகைய செயல்களை கண்ணியமிக்க அரபிகள் நன்னோக்கோடு பார்க்கவில்லை. அரேபியாவில் விவாகரத்துக்கான பொதுவான பழக்கம் இருந்தது. கணவன் விரும்பியபோது மனைவியை விலக்கி வைக்க முடிந்தது. பெண் குழந்தைகளை உயிருடன் புதைக்கும் பழக்கமும் அரபியாவில் இருந்தது. ஆனால், இந்த வழக்கம் குறிப்பிட்ட சில கோத்திரங்களிடம் மட்டுமே இருந்தது; பொதுவானதாக இருக்கவில்லை.

பெண்களுக்கு வாரிசு உரிமை கிடைத்திருக்கவில்லை; எந்த அளவிற்கு என்றால், ஒரு நபருக்கு ஆண் வாரிசு இல்லையெனில், அவரது மரணத்திற்குப் பின் சொத்து முழுவதையும் அவரது சகோதரரே எடுத்துக் கொள்வார், அவரது மனைவியும் மகள்களும் வெறுங்கையோடு நிற்க நேரிடும்.

### சடங்குகளும் மூடநம்பிக்கைகளும்

இஸ்லாம் தோன்றிய நேரத்தில் அரபியாவில் பல்வேறு கொள்கைளையும், பல்வேறு சிந்தனைகளையும் பின்பற்றுகின்ற ஏராளமான மதங்கள் பின்பற்றப்பட்டன என்பதும் தற்போது விவரிக்கப்பட்டுவிட்டது. ஆனால், பழக்கவழக்கங்கள் மற்றும் சமுதாய ஒழுக்க நெறிகளின் அடிப்படையில், ஒட்டுமொத்த அரேபியாவும் ஒரே சமுதாயத்தின் ஆட்சியில் இருப்பது போல இருந்தது. நாம் தற்போது மேலே எடுத்துரைத்துள்ள பழக்கவழக்கங்கள் மற்றும் குணங்கள் அனைத்தும் அனைவரிடமும் தெளிவாகக் காணப்படக் கூடியதாகவும் இருந்தது. ஆக, அறியாமைக் காலத்தில், யஸ்ரிபில் ஃபித்யூன் என்ற ஓர் யூதத் தலைவன் இருந்தான். நகரில் எந்தப் பெண்ணுக்குத் திருமணம் நடந்தாலும், அவள் தன்னுடைய வீட்டிற்கு வரவேண்டும் என்பது அந்த கயவனின் கட்டளையாக இருந்தது. இதனால், மதீனாவின் பெரும்பாலான யூதர்கள் தங்கள் கன்னிகைப் பெண்களைத் திருமணத்தின் போது இவனது வீட்டிற்கு அனுப்ப வேண்டியிருந்தது; அதன் பின்னரே அவள் வேறு ஒருவருக்கு ஆகுமானவளாக இருந்தாள். இறுதியாக, தன்மானமுள்ள ஒரு நபர் ஃபித்யூனைக் கொன்றுவிட்டான். மியூர் ஸாஹிபும் தனது புத்தகத்தில் இதை ஒப்புக் கொண்டுள்ளதைப் போன்று அந்த காலத்தில் கிறிஸ்தவர்களின் நிலைமையும் மிகவும் மோசமாக இருந்தது.

சுருங்கக் கூறின், அரேபியாவில் சிலை வழிபாட்டாளராக இருந்தாலும், யூதராக இருந்தாலும் அல்லது கிறிஸ்தவராக இருந்தாலும், அனைத்து ஒழுக்கம், பழக்கவழக்கங்கள் மற்றும் சமுதாய குணநலன்களின் அடிப்படையில் அனைவரும் ஒன்றுபோல் இருந்தனர். கொலை, கொள்ளை, சூதாட்டம், விபச்சாரம், மது அருந்துதல் ஆகியவற்றின் சந்தை சூடுபிடித்திருந்தது. இதேபோன்று சடங்கு சம்பிரதாயங்களை பின்பற்றுவதும் அனைவரிடமும் காணப்பட்டது. சடங்கு சம்பிரதாயங்கள் எந்த அந்தஸ்தில் இருந்தது என்றால் அதற்கெதிரில் மார்க்கம் ஒன்றுமற்றதாக இருந்தது. (தொடரும்.......)

(ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 59 -63)

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *  * * * * * *

**1-ம் பக்கத் தொடர்ச்சி......**
**(தஃப்ஸீரே கபீர் )**

இதற்கு அடுத்து,

وَاَقِمِ الصَّلٰوةَ ؕ اِنَّ الصَّلٰوةَ تَنۡهٰى عَنِ الۡفَحۡشَآءِ وَالۡمُنۡكَرِ

(மேலும் தொழுகையை நிலைநிறுத்துவீராக) என்றும் கூறி, துஆக்கள் இன்றி தூய்மையைப் பெற முடியாது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளான். நீங்கள் திருக்குர்ஆனை ஓதுவதன் மூலம் உங்களால் நிச்சயமாக உலகியல் எண்ணங்களை மாற்ற முடியும். ஆனால் அல்லாஹ்வின் அருள் இன்றி உலகில் தூய்மையை பெற முடியாது. இந்த அருளானது துஆவின் மூலமாக மட்டுமே கிடைக்கும். எனவே, அல்லாஹ் எந்த நோக்கத்திற்காக உங்களை உருவாக்கியுள்ளானோ, அதில் உங்களுக்கு வெற்றி கிடைக்கும் பொருட்டு தொழுங்கள்; துஆக்கள் செய்யுங்கள்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 10, பக்கம் 412)

திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் நினைவிலேயே
உள்ளங்கள் அமைதி அடைகின்றன
(13:29)

A. Khaleel Ahmad
( Melapalayam)

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**
**தொலைபேசி எண் : 1800 103 2131**
இந்த ***TOLL FREE*** எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 01 OCTOBER 2026 Issue No. 40

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்களின் கனடா சுற்றுப் பயணம் - 2013

(அறிக்கை : அப்துல் மாஜித் ஸாஹிப் தாஹிர்)

### வான்கூவர் பிரிட்டிஷ் கொலம்பியாவில் மஸ்ஜித் பைத்துர் ரஹ்மான் திறப்பு விழா நிகழ்ச்சியில் ஹுஸூர் அவர்களின் சிறப்புரை

**மே 18,2013**

தஷஹ்ஹுத் தவூத் மற்றும் தஸ்மியாவிற்குப் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

அனைத்து கண்ணியத்திற்குரிய விருந்தினர்களுக்கும்
அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்தஹு!

உங்கள் மீது அல்லாஹ்வின் சாந்தியும், சமாதானமும் அருள்களும் உண்டாகட்டுமாக!

எல்லாவற்றிற்கும் முதலாக உங்களுக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். நீங்கள் எங்களுடைய அழைப்பை ஏற்று கலந்து கொண்டு உள்ளீர்கள். அதாவது, வான்கூவர் பள்ளித் திறப்பு விழாவில் எங்களுடன் கலந்து கொண்டுள்ளீர்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

உலகத் தொடர்புகளின் காரணமாக மற்றவர்களின் மக்கள் தங்களுடைய சமுதாய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றனர். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் அழைக்கும்போது பொதுவாக மக்கள் அந்த அழைப்பை ஏற்றுக் கொள்கிறார்கள். இதற்கு மாறாக முக்கியமான காரணம் இருந்தால் மட்டுமே கலந்து கொள்ளாமல் இருகிறார்கள்.அனைத்து சமுதாய மக்களும் இந்த மார்க்க நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது என்பது அனுதினமும் நிகழும் விஷயம் ஆகும். ஆனால், இஸ்லாமிய நிகழ்ச்சியில் முஸ்லிம் அல்லாத மக்கள் கலந்து கொள்வது என்பது அவர்களிடம் உள்ள சகிப்புத்தன்மைக்கான தெளிவான ஆதாரமாகும். மேலும், மற்றவர்களைப் பற்றி அறிந்து கொள்ள அவர்களுடன் நட்பு கொள்ள வேண்டும் என்ற அவர்களின் உளக் கிடக்கையை இது வெளிப்படுத்துகிறது.

இங்கு நாம் அனைவரும் பள்ளிவாசல் திறப்பு விழாவிற்காக ஒன்றுகூடியுள்ளோம். இது இந்த மாநிலத்தின் முதல் பள்ளிவாசல் ஆகும். ஒரு முக்கிய நோக்கத்திற்காக இந்த பள்ளிவாசல் கட்டப்பட்டு உள்ளது. மேலும், இதற்கான திறப்பு விழா நம்முடைய மகிழ்ச்சிக்கும், சந்தோஷத்திற்கும் காரணமாக அமைந்து உள்ளது. நீங்கள் அனைவரும் இங்கு வ்நதது மற்றும் எங்களுடைய மகிழ்ச்சியில் பங்கு கொண்டது என்பது எங்களை அதிக அளவில் நன்றி செலுத்த வைக்கிறது.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்)அவர்கள் கூறினார்கள்:

இந்தப் பகுதியில் பள்ளிவாசல் கட்டியதன் மூலம் இங்குள்ள மக்களுடன் தொடர்பில் முன்னேற்றம் ஏற்படும் என்று நம்புகிறேன். மேலும் என்னுடைய துஆவும் அதுவாகவே உள்ளது.

மேலும், இஸ்லாத்தைப் பற்றி அச்சமடைந்துள்ள முஸ்லிம் அல்லாதவர்களின் பயம் இதன் காரணமாக நீங்கிவிடும் என்று நான் நம்புகிறேன். மேலும், துஆ செய்கிறேன். மேலும் நீங்கள் அனைவரும் எங்களுடைய மார்க்கத்தைப் பற்றிய உண்மை நிலையையும் அதனுடைய அழகிய வடிவத்தையும் காண்பீர்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

நான் சில சொற்களைக் கொண்டு மஸ்ஜித் என்பதன் பொருளையும், நோக்கத்தையும் கூற விரும்புகிறேன். மஸ்ஜித் என்பது ஓர் அரபிச் சொல்லாகும். இதனை ஆங்கிலச் சொல்லான MOSQUE என்ற சொல்லுடன் மொழியாக்கம் செய்யப்படுகிறது.

ஆனால், ஆங்கிலச் சொல்லாகிய Mosque என்பது அரபிச் சொல்லான மஸ்ஜித் என்ற சொல்லின் பொருள் மற்றும் நோக்கத்தை சரியாக விளக்குவது கிடையாது. இதனால் தான் மஸ்ஜித் உடைய உண்மையான பொருளைக் கூற விரும்புகிறேன்.

மஸ்ஜித் என்ற சொல்லின் உண்மையான பொருள் வணங்குமிடம் என்பதாகும். அதாவது எங்கு மக்கள் இறைவனுக்கு முன்னால் மன்றாடுதலில் இருக்கின்றார்களோ அப்படிப்பட்ட இடத்தின் பெயராகும்.

அனைத்து மஸ்ஜித் (வணங்குமிடங்களும்) இறைவனுக்குரியதாகும் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான். அதாவது அது அவனுடைய உரிமையில் இருக்கிறது.

சந்தேகமின்றி அனைத்து மஸ்ஜித்களும் வெளிப்படையாக மனிதனால் கட்டப்பட்டவையே ஆகும். ஆனால், ஓர் உண்மையான மஸ்ஜித் இறைவனுக்காக மட்டுமே கட்டப்பட்டது என்றால், அதனுடைய வாசல் கதவுகள் அனைவருக்காகவும் திறந்தே இருக்கின்றன.

எவர்கள் அமைதி மற்றும் நிம்மதிக்கான உத்திரவாதத்தை வழங்குகிறார்களோ மேலும் இந்தப் பள்ளிவாசலுக்கு வர விரும்புகிறார்களோ அவர்களுக்கு இந்தப் பள்ளிவாசலின் கதவுகள் திறந்தே இருக்கும். இதற்கான செயலளவிலான உதாரணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களின் வாழ்க்கையில் காணமுடிகிறது.

ஒருமுறை நஜ்ரானிலிருந்து கிறிஸ்தவர்களின் குழு மதீனாவிற்கு வந்தது. அவர்களின் வணக்க வழிப்பாட்டிற்கான நேரம் வந்தபோது, அவர்கள் பதற்றத்துடன் வணக்க வழிபாட்டிற்காக ஓர் இடத்தை தேட ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களின் நிம்மதியற்ற நிலையைக் கண்டு கவலையடையத் தேவையில்லை; நீங்கள் மதீனாவிலேயே எங்களுடைய பள்ளிவாசலிலேயே வணக்க வழிப்பாட்டை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மாற்று மதத்தினருடன் கடுமையான நடைமுறையை மேற்கொண்டார்கள் என்று இன்றைய காலகட்டத்தில் முஸ்லிம் அல்லாத மக்களின் ஒரு பெரும் பகுதி ஆட்சேபனை செய்கிறது. இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுனர் மீது அவதூறு பரப்பப்படுகிறது.

ஒருபுறம் இஸ்லாத்தின் எதிரிகள் மதத்தைக் கண்டு அஞ்சும் அதே சமயத்தில் இஸ்லாத்தின் தோற்றுனர் மீது தாக்குதல் செய்ய எல்லையில்லாத மற்றும் முட்டாள்தனமான மற்றும் பொய்யான வெறுப்பையூட்டும் ஆட்சேபனைகளை செய்கின்றார்கள்.

உண்மையான வரலாறு தெரியாததால் அவர்கள் அனைவரும் இதனை செய்கிறார்கள். மேலும், அவர்களுக்கு உண்மையான இஸ்லாம் மற்றும் கறைபடியாத போதனைகள் பற்றித் தெரியாமல் இருப்பதே அதற்கான காரணம் ஆகும். முஸ்லிம்களில் சில பிரிவினரின் கொடூரமான செயல்களின் விளைவே இத்தகைய வெறுப்பிற்கும் மற்றும் கவலைக்குரிய நிலைமைகளுக்கும் காரணமாக அமைந்தன என்பதில் சிறிதும் சந்தேகம் கிடையாது.

பெயர் தாங்கி முஸ்லிம்கள் இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை விட்டும் விலகி மிகத் தொலைவில் சென்று விட்டார்கள். இதன் காரணமாகவே அவர்கள் இத்தகைய செயல்களை செய்து வருகிறார்கள். நஜ்ரானிலிருந்து வந்த கிறிஸ்தவ குழுவினருக்கு செய்யப்பட்ட ஏற்பாடு தொடர்பாக நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கருணை உள்ளத்தின் உதாரணத்தை எடுத்து வைத்து விட்டேன். நான் இப்போது உங்களுக்கு முன்னால் அமைதி எதாடர்பான திருக்குர்ஆனின் போதனையை எடுத்து வைப்பேன். சூரா அல்பக்கரா, வசனம் 115-ல் அல்லாஹ் கூறுகின்றான்: அல்லாஹ்வின் பள்ளிகளில் அவனுடைய பெயர் கூறப்படுவதைத் தடுத்து, அவற்றைப் பாழாக்க முயல்பவனை விட மிகப் பெரிய அநியாயக்காரன் எவன்?.

ஒரு உண்மையான மஸ்ஜிதின் வாசல் எப்போதும் மக்களுக்காக திறந்து இருக்கும். அது இறைவனை வணங்குவதற்கான இடமாகும்.

**(தொடரும்.......)**

தமிழாக்கம்
முரப்பி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *

**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad